
இது ஒரு ★★★★★ இதழ்
குடும்ப நாவல்
நவம்பர் - 16, 2010 ரூ.10
லட்சுமி பிரபா
நீல விழிகள்







ஆதவன் கண் திறக்க இன்னும் ஒருமணி நேரம் இருந்தது. வழக்கமாய் மிதிலா ஐந்து மணிக்கே கண் விழிப்பவள் என்பதால்... தன்னிச்சையாய் இன்றும் விழித்துக் கொண்டாள்.

இரு கைகளையும் பரபரவென்று தேய்த்து உள்ளங்கையில் முகம் பார்த்துக் கொண்டாள்.

ரோஜாவின் மென்மையைப் பிரதிபலித்த தேகம்... எலுமிச்சைப்பழத்தைப் போன்று பளிச்சென்ற நிறம்... கை தேர்ந்த ஓவியன் ஒருவன் வரைந்து வரைந்து ஒவ்வொன்றையும் முகத்தில் ஒட்ட வைத்தது போல்... களையாக – கவிதை பாடலாம் போலிருந்ததாள்.

கலைந்த கூந்தலைக் கோதி கொண்டையிட்ட படியே அடுக்களைக்குள் எட்டிப் பார்த்தாள்.

"எழுந்துட்டியா மித்தி! இன்னிக்கு வெள்ளிக்கிழமை.. மறக்காம எண்ணெய் தேய்ச்சு ஸ்நானம் பண்ணிடு. பண்ணிட்டு..." அம்மா விசாலம் பேசி முடிப்பதற்குள் இடை புகுந்தாள் மிதிலா.

"ஸ்நானம் பண்ணிட்டு அப்படியே பூஜைக்குரிய பூக்களைப் பறிச்சுட்டு வரணும். துளசி மாடத்துல அகல் விளக்கேத்திட்டு பூத்தூவணும். அவ்வளவு தானேம்மா...?"

"துளசி மாடத்தை வலம் வந்து மறக்காம..."

"நான் எதையும் மறக்க மாட்டேன் அம்மா! துளசியைப் பறிக்கிறப்போ... அதற்குரிய மந்திரத்தை மூணு வாட்டி சொல்லிடறேன். போதுமா?"

"பூவையும் துளசியையும் நீ பறிச்சுட்டு வர்றதுக்குள்ளே டிகாக்ஷன் போட்டு ஸ்ட்ராங்கா காபிபோட்டு வச்சுடறேன். காப்பியாவது குடிச்சுட்டு சிவா வீட்டுக்குப் போ...! நின்னு நிதானமா டிபன் சாப்பிட்டுட்டு போம்மான்னு சொன்னா கேட்க மாட்டேங்கிறியே? இவ்ளோ சீக்கிரத்திலேயே அந்த வெளிநாட்டுக்காரக்குட்டி வந்து இறங்கிடப்போறாளா?

ஹூம்! அவ இங்கே வரப்போறாங்கிற செய்தியைக் கேட்டதிலோ்ந்து... சிவாவோட போக்கே சரியில்லை... ஒரு மார்க்கமாத்தான் அலையறான். போ..."

விசாலம் புலம்பியதைக் கேட்ட மாத்திரத்தில்... மிதிலாவின் முகம் அனிச்ச மலராய் சட்டென்று வாடிக் கூம்பிப் போனது.

பதிலேதும் பேசாமல் மௌனமாய் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

முப்பது நிமிடங்கள் கரைந்த போது....

மயில் கழுத்து வண்ண மைசூர் சில்க் புடவை கட்டி... நீண்ட ஈரக் கூந்தலை நுனியில் முடிச்சிட்டு துளி முல்லைச் சரத்தை நடுவில் செருகியபடி வெளிப்பட்டாள் மிதிலா.

அவசரமாய் பின்புறத் தோட்டத்திற்குள்புகுந்து நந்தியாவட்டை பூக்களையும் அரளிப் பூக்களையும் செம்பருத்திப் பூக்களையும் பறித்து அர்ச்சனைக் கூடைக்குள் போட்டுக் கொண்டாள்.

கந்தசாமி – விசாலம் தம்பதியினருக்கு பத்து வருடங்களாக மகப்பேறு வாய்க்கவில்லை.

தவமாய் தவமிருந்து பெற்ற ஒரே மகள் மிதிலாவின் மீது கந்தசாமி உயிரையே வைத்திருந்தார்.

கந்தசாமிக்கு பஞ்சு மார்க்கெட்டில் வியாபாரம்.. வசதிக்கு குறைவில்லை.

மிதிலாவை பெண்ணுக்குப் பெண்ணாக.. மகனுக்கு மகனாகத் தட்டிக் கொடுத்து தைரியமூட்டி வளர்த்துவிட்டிருந்தார்.

அவளது விருப்பப்படியே டிகிரி முடித்ததும்– பெண்கள் மட்டுமே வேலை பார்க்கும் பத்திரிகை அலுவலகத்தில் ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளராக சேர்ந்து கொள்ள 'பச்சைக் கொடி' காட்டினார்.

மிதிலாவுக்கு அழகை அள்ளிக் கொடுத்த பகவான்... அதற்கேற்ற அறிவையும் வாரி வழங்கி விட்டிருந்தார்.

அம்மா விசாலத்தைப் போல்.. அவளுக்குப் பிறவியிலேயே ஆன்மீகத்தில் நாட்டம் இருந்தது.

'விஷ்ணு சகஸ்ர நாமம்,' 'லலிதா சகஸ்ர நாமம்,' 'ஆதித்ய ஹ்ருதயம்'... என்று சகலத்தையும் ஸ்பஷ்டமாய் உச்சரிப்பதில் கெட்டிக்காரி.

படித்தவள்தான்.. அதுவும் இந்தக் காலத்தைச் சேர்ந்த இளம்பெண்தான்..

பகுத்தறிவு உள்ளூர ஊறிக்கிடந்தாலும்... 'ஏன்:? எதற்கு?' என்று குதர்க்கமாய் கேள்வி கேட்டுப் பெரியவர்களை நோகடிக்காமல்... சாஸ்திர சம்பிரதாயங்களை மதித்து நடந்துகொள்பவள்.



நேற்றிலிருந்து மிதிலாவுக்குப் பரபரப்பு தொற்றிக் கொண்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

'சிவா! சிவா! நீ மனசு மாறிடுவியா?' தனக்குள் அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டாள்.

திடீர் திடீர் என்று புதிது புதிதாக சந்தேகம் முளைவிட்டது நிஜம்.

'சிவா! என் மனசுல நீ தான் இருக்கே! அதே மாதிரி உன் மனசுல நானிருக்கேன்ல?' என்று சிவாவிடமே நேரடியாகக் கேட்டுவிட நாக்கு துடிக்கத் தான் செய்தது.

'இதென்ன முட்டாள்தனமான கேள்வி? சிவா யாரு? என்னோட அத்தான். ஒன்று விட்ட அத்தை கோமதியின் மகன். அதுமட்டுமா? சிவாவின் அப்பா கோதண்டராமனும் கந்தசாமியும் நெருங்கிய நண்பர்கள் ஆயிற்றே? சிறுவயதிலேர்ந்து நானும் சிவாவும் சேர்ந்து விளையாடி இருக்கிறோம்... பள்ளிக்கும் கல்லூரிக்கும் இணைந்து சென்றிருக்கிறோம். சிவா என்னை விட நான்கு வயது மூத்தவன். நான் வயதுக்கு வந்தபின்பு கூட... எங்கள் நட்பையோ நேசத்தையோ முறித்துவிடப் பெரியவர்கள் முனைந்ததில்லையே?

மாறாக...? எங்கள் இருவரையுமே 'முடிச்சுப்போட்டு' அவர்கள் பேசி கேலி செய்தபோதெல்லாம்... கண்களில் கனிவும் நேசமும் பொங்க... சிவா என்னைப் பார்வையாலேயே அளவெடுப்பானே?

சந்தோஷத்தில் என் இதயத்திற்குள் புறா சிறகடிக்கும்; ஜில்லென்று உச்சந்தலை முதல் பாதம் வரை மின்சாரம் பாய்ந்தது போல்.. மேனி சிலிர்க்கும். நாணத்தில் சிவாவை ஏறிட்டுப்பார்க்கத் தெம்பின்றி நான் தலை குனிவேனே! இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?

சிவாவும் என்னை நேசிக்கிறான். மனதாரக் காதலிக்கிறான் என்று தானே அர்த்தம்?

ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும்.

சிவாவை வீணாக ஏன் சந்தேகிக்க வேண்டும்?'

மனதைத் தட்டி அடக்கினாள் மிதிலா.

நெஞ்சில் வரைந்த சந்தேகக் கோலத்தை வலுக்கட்டாயமாக நீர் ஊற்றிக் கலைத்து... தன்னைத் தானே அவ்வப்போது சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

என்னதான் சமாதானம் செய்தாலும்... உள்ளூர சந்தேகப் பேய் புகுந்து

அவளை ஆட்டிப் படைக்கத்தான் செய்தது.

அந்த விஷயத்தைக் கேள்விப்பட்டதிலிருந்து நிம்மதி பறிபோய்விட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

சிவாவின் தாய்மாமன் ராஜதுரை ஒரு டாக்டர். அமெரிக்காவிற்குச் சென்று சம்பாதிக்க ஆரம்பித்தவர்... அங்கேயே வெள்ளைக்காரப் பெண்ணைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

"வெள்ளைக்காரியைக் கட்டிக்கிட்டு குடும்ப மானத்தைக் குழி தோண்டிப் புதைச்சுட்டியே?

இனி உன்னோட சகவாசமே எங்களுக்கு வேணாம். உன்னை நாங்க தலைமுழுகிட்டோம். தப்பித்தவறிக்கூட இந்தப்பக்கம் தலைவச்சுப் படுத்துடாதே" என்று ஃபோனில் கத்தி விட்டு உறவைத் துண்டித்துக் கொண்டனர் சிவாவின் குடும்பதினர்.

நான்கு வருடங்களுக்கு முன்பு வரை– ஃபோனிலோ, கடிதத்திலோ பேச்சு வார்த்தை எதுவும் கிடையாதுதான்.

கோதண்டராமனுக்கு விபத்தில் அடிபட்டு இடுப்புக்குக் கீழ் செயல்இழந்து போனதுபோது... கோமதி தன் அண்ணனுக்கு ஃபோன் செய்து கதறி விட்டாள்.

'தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பதற்கேற்ப பழைய மனக்கசப்பை மறந்து அமெரிக்காவிலிருந்து பணஉதவி செய்யத் தொடங்கினார் ராஜதுரை.

கோதண்டராமனின் வைத்தியச்செலவு, சிவாவின் கல்லூரிப் படிப்புச்செலவு ஆகியவற்றை ஏற்றுக் கொண்டதோடு சிவாவின் இரட்டைத் தம்பிகளான ரகு, ரவியின் மேற்படிப்புக்கும் ராஜதுரையே ஆவன செய்தார்.

ஃபோன் மூலம் உறவைப் புதுப்பித்துக் கொண்ட ராஜதுரை ஏனோ தாயகத்திற்குத் திரும்பாமல் பிடிவாதமாய் இருந்தார்.

அருமை மனைவி மெர்ஸி திடீரென்று மாரடைப்பில் காலமானதும்... செல்ல மகள் 'இந்து'வை அழைத்துக் கொண்டு தாயகம் திரும்ப சம்மதித்தார்.

அவர் சம்மதித்ததிலிருந்து... சிவாவின் குடும்பமே இந்துவின் புராணத்தைத்தான் பாட ஆரம்பித்துவிட்டது.

"மித்தி... எங்க வெள்ளைக்கார அத்தை மாதிரியே இந்துவும் நல்ல கலராம்.

மூக்கும் முழியும் மாமாவைக் கொண்டு பொறந்துட்டாளாம். அவளும் டாக்டருக்குத்தான் படிச்சிருக்காளாம்."

கண்கள் மினுங்க, சிவா பேசிய போது... மிதிலாவுக்கு அடிவயிற்றில் புளியைக் கரைத்தது.



கனத்த இதயத்தோடு துளசி மாடத்தை வலம் வந்தாள். அர்ச்சனைக் கூடையிலிருந்து சில புஷ்பங்களை எடுத்து துளசிச் செடியில் தூவினாள்.

"துளஸி அம்ருத ஸம்பூதே
ஸதா த்வம்கேசவ ப்ரியா
கேசவார்த்தம் லுநரமி த்வாம்
வரதா பவசோபனே..."

மந்திரத்தை பவ்யமாய் உச்சரித்தபடி துளசி இலைகளைப் பறித்து கூடைக்குள் போட்டுக் கொண்டாள்.

துளசி இலைகளையும் உதிரிப் பூக்களையும் பூஜையறையில் வைத்துவிட்டு... காபியை ஒரே மூச்சில் குடித்துவிட்டு ஹேண்ட் பேக்கை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டாள்.

"அம்மா! கோமதி அத்தை கூடமாட ஒத்தாசை செய்ய என்னைக் கூப்பிட்டிருந்தாங்க– விருந்து சமையலுக்கு உதவணும். சிவாவோட மாமாவும் இந்துவும் வந்ததும் பார்த்துட்டு... நான் அப்படியே பத்திரிகை ஆபீஸுக்குப் போயிடுவேன்" உரத்துக் குரல்கொடுத்தபடி ஸ்கூட்டியை தெருவிற்குத் தள்ளிக் கொண்டு போன வேளையில் அவளது செல்ஃபோன் அலறியது.

அவளது காலேஜ்மேட் காவ்யா படபடப்பாய் பேசினாள்.

"நல்லாயிருக்கியா மித்தி? உனக்கொரு இன்ட்ரஸ்ட்டிங் நியூஸ் சொல்றதுக்குத்தான் ஃபோன் பண்ணினேன். போன வாரம் எங்க சித்திவீட்டுல கல்யாணம். 'தேனி'க்குப் போயிருந்தோம்.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பக்கம் 'சுருளிமலை' இருக்கு. கேள்விப்பட்டிருக்கியா?"

"உம் கேள்விப்பட்டிருக்கேனே! அங்க என்ன விசேஷமாம்?"

"என்னடி லேசா கேட்டுட்டே? தேனி வட்டாரமே திமிலோகப் பட்டுட்டு இருக்கு தெரியுமா?

சுருளியில விசேஷமே சுருளி தீர்த்தம் தான்... அந்தத் தீர்த்தம் விழற எடத்துக்குப் போகணும்னா... ஒத்தையடிப்பாதையில மலை உச்சியில ஏறணும்.

அடர்ந்த வனாந்தரம் தான்.. மேலே ஏறிப் போற பாதையில கைலாச குகை, விபூதிகுகை, நாகம்மா குகைன்னு ஏகப்பட்ட குகைங்க இருக்காம்.

சித்தர்கள் நடமாடற புண்ணிய மலையாம்.. அதுல நாகம்மா குகையை நாடி ஏகப்பட்ட ஜனங்க தினமும் கூடுறாங்க..."

"அந்தக் குகையில அப்படியென்ன விசேஷமாம்?"

"நாகம்மாங்கிற பேர்ல ஒரு அம்மா குறி சொல்றாங்களாம்.. ஜடா முடியோட இருக்கிற அந்தம்மாவைப் பார்க்கிறதுக்குக் கூட்டம் முண்டியடிக்கிறாங்களாம்.

ஆனா நமக்கு அதிர்ஷ்டம் இருந்தாத்தான் அருள்வாக்கு கிடைக்குமாம். குகைக்குள்ளேயே தியானத்துல கண்ணை மூடி உட்கார்ந்துட்டிருக்கிற நாகம்மா... திடீர்னு பேர் சொல்லிக் கூப்பிடுவாங்களாம். அந்தப் பேருக்குரிய நபர் மட்டும் குகைக்குள்ளே போகலாம். அம்மாவைக் கண்குளிர தரிசிக்கலாம். அருள் வாக்கும் கிட்டுமாம்... அப்படி பார்த்த அதிர்ஷ்டசாலிங்க வெளியில வந்து சொன்ன தகவலைக் கேட்கும்போது.. அப்படியே உடம்பே புல்லரிச்சுப் போகுதாம்.. இந்த மேட்டர் உனக்கு ரொம்ப உபயோகமா இருக்குமே... அதான்...?"

"அதிருக்கட்டும் காவி! அந்தம்மா எப்படி இருப்பாங்களாம்?"

"அருள்வாக்கு சொல்லி முடிச்சுட்டு குபீர்னு கண்ணைத் தொறப்பாங்களாம்... பெரிய்ய கண்ணாம் மித்தி!' அதுவும்.. பார்க்கிறதுக்கே பயம் வரும் படியா....நீல விழிகளோட இருப்பாங்களாம்..... சுளுந்து வெளிச்சத்துல பார்த்தா 'பகீர்'னு வருமாம். அதுமட்டுமில்ல... அந்தக் குகையில, அடுத்த அடுத்த வாரிசா நீல விழிகளோட இருக்கிற நாகம்மா தோன்றுவாங்களாம்.

குறி சொல்றதோட, தீராத வியாதிக்கும் மூலிகை மருந்து தந்து குணப்படுத்தறாங்களாம்.. கேட்கக் கேட்க.. ஆச்சரியம் தாங்கலை..

இன்னும் நிறைய தகவல்கள் இருக்கும். நீ ஒரு ரிப்போர்ட்டராச்சே? நேர்ல போய் சுவாரஸியமான தகவல்களைத் திரட்டிக்கோ. சரியா?"

அவள் மேற்கொண்டு பேசியது எதுவும் மிதிலாவின் செவிகளில் விழவில்லை.

'குகை... நாகம்மா... நீல விழிகள்' என்று அவளது அழகிய இதழ்கள் முணுமுணுக்கும் போதே.. ஏதோ ஒரு அச்சம் அவளது பிடரியை சில்லென வருடியது.






பிரதான சாலைக்குள் வந்து நான்கு தெருக்களைத் தாண்டியதும்.. சிவாவின் வீடு வந்துவிட்டது.

வாசலை அடைத்து மிகப்பெரிய மனைக் கோலம் காவி தீட்டிப் போடப்பட்டிருந்தது.

செங்காவித் தீற்றலுடன் அரிசிமாவுக் கோலத்தைப் போட்டாலே லட்சுமி கரம்தான்.

வீட்டிற்கே தனிக் களை வந்துவிட்டாற்போலிருந்தது. நிலை வாசலில் மாவிலைத் தோரணம் கும்மென்ற மணத்துடன் வரவேற்றது.

ஸ்கூட்டியை ஓரங்கட்டி நிறுத்திவிட்டு மெல்லப் படி ஏறி மிதிலா ஒரு கணம் தயங்கி நின்று தோரணத்தை வெறித்தாள்.

"என்ன மித்தி? வாசல்லேயே தயங்கி நின்னுட்டே? உள்ளே வாம்மா!" சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த கோதண்டராமன் அவளை வரவேற்றார்.

"அலங்காரமெல்லாம் அமர்க்களமா இருக்கு. பார்க்கிறதுக்குக் கல்யாணவீடு மாதிரியே இருக்கு மாமா."

"கூடிய சீக்கிரம் இந்த வீட்ல கல்யாணம் நடக்கப்போகுதுல்ல? அதான் முன் கூட்டியே 'கல்யாணக்களை' வந்தாச்சு போலிருக்கு. 'மித்தி ஏன் இன்னமும் வரலை'ன்னு உங்கத்தை அதுக்குள்ளே மூணுவாட்டி கேட்டுட்டா..

அம்மா தனியா கஷ்டப்படறாளேன்னு... சிவா கறிகாய் நறுக்கித் தரப் போனான்.

உள்ளே போய் என்னன்னு பாரும்மா?"

"சரிங்க மாமா!" ஹேண்ட் பேக்கை டீப்பாயில் வைத்துவிட்டு கிச்சனை நோக்கி விரைந்தாள் மிதிலா.

அவல் கேசரியில் வறுத்த முந்திரிப்பருப்பைக் கொட்டி கிளறிக் கொண்டு இருந்தாள் அத்தை கோமதி.

நீண்ட கடப்பைக்கல் அடுப்பு மேடையில்... சற்று ஓரமாக ஏறித் தொற்றி அமர்ந்தபடி சின்ன வெங்காயத்தை உரித்துக் கொண்டிருந்தான் சிவா.

அவனது விழிகளிலிருந்து கண்ணீர் கசிந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும். மிதிலாவுக்கு சிரிப்பு பீறிட்டது.

"என்ன சிவா? ரெண்டு சின்ன வெங்காயத்ததை உரிச்சு முடிக்கும்

முன்ன... இப்படி அழுது வடியறே?"

"அப்பாடா... வந்துட்டியா மித்தி? நீயே உங்கத்தைக்கு உரிச்சுக்கொடுத்துடு" – கூறியபடியே கைகளைக் கழுவிக் கொண்டு நகர்ந்தான்.

"சாஃப்ட்வேர் என்ஜினியர் நீ! வெங்காயத் தோலை உரிக்கிறதுக்கு முன்ன அஞ்சு நிமிஷம் தண்ணியில ஊற வைச்சுட்டு உரிச்சா... ஈஸியா கண்ணுல தண்ணி வராம உரிச்சுடலாம். இப்பவாவது புரிஞ்சுதா? லேடீஸ் வேலைன்னா... அது அவ்வளவு ஈஸி இல்லைன்னு? இந்த சின்ன டெக்னிக் தெரியலையே உனக்கு?"

"நல்லாவே புரியுதும்மா... வீட்டுலேர்ந்து விண்வெளிக் கலம் வரை உங்க ஆட்சி தானே கொடிக்கட்டிப் பறக்குது? நான் ஆர்க்யூ பண்ணத் தயாரா இல்லை மித்தி! நீ தான் பத்திரிகைக்காரியாச்சே? உன்கிட்ட பேசி ஜெயிக்க முடியுமா சொல்லு?"

"என்ன இது? ஆச்சரியமா இருக்கு... ஆர்க்யூ பண்றதுக்கு எப்பவும் ஆலாய்ப் பறக்கிறவனாச்சே நீ? பிலு பிலுன்னு வரிஞ்சு கட்டிட்டு வர்ற மனுஷன்.. விலகிப் போறியே? இன்னிக்கு மழை வரப்போகுது சிவா!"

"ஆர்க்யூ பண்ற மூடுலே நானில்லை மித்தி. மெனு என்னன்னு கேட்டுக்கிட்டு அம்மாவுக்கு ஹெல்ப் பண்ணு!"

"அவனோட மாமாவும் இந்துவும் வரப்போறாங்கல்ல..? அதான் ஒரே பரபரப்பா இருக்கான்...." சிரித்தார் கோமதி.

"என்னம்மா நீயும் அவ கூட சேர்ந்துகிட்டே? வராதவங்க வர்றாங்க... யு.எஸ்.லேர்ந்து வர்ற டாக்டர் மாமாவையும் மாமன் மகளையும் பார்க்கப்போறோமேன்னு... த்ரில்லிங்கா இருக்காதா பின்னே? ஏன் மித்தி? நீ இன்னிக்கு ஆபீசுக்கு போய்த்தான் ஆகணுமா? எங்க ராஜதுரை மாமா.. உனக்கும் ஒண்ணு விட்ட சித்தப்பா தானே? இன்னிக்கு ஒரு நாள் லீவு சொல்லிடேன்... ராஜதுரை மாமா கூடவும் இந்து கூடவும் சேர்ந்து சாப்பிட்டுட்டு கலகலன்னு பேசிட்டு இருப்போமே?"

"அவங்க வந்ததும் பார்த்துட்டுதானே கிளம்பப் போறேன்? சாயந்தரம் நேரா இங்கே வந்துடறேன். இன்னும் சொல்லப்போனா... லீவு போடறதைப்பத்தி யோசிக்கலை... போட்டுறலாம்தான்! ஆனா, இன்னிக்கு ரொம்ப பரபரப்பான – த்ரில்லான நியூஸைக் கேள்விப்பட்டேன். அதைப் பத்தி எடிட்டர் கிட்டே நேரடியா சொல்லணும். அவர் கிட்டே அனுமதி



வாங்கியாகணும். ஒரு கவர் ஸ்டோரியே பண்ணலாம் தெரியுமா? எடிட்டர் ஓகே சொல்லிட்டாங்கன்னா... நான் உடனே மேற்கு மலைத் தொடர்ச்சிப் பக்கமா... ஐ' மீன் சுருளி மலைக்குப் பயணப்படணும்.

சுருளி மலைக்கு நான் போறதுக்கு... அம்மா, அப்பா கிட்டே பெர்மிஷன் வாங்கணும். என் ஃபிரண்ட் காவ்யா தான் ஃபோன்ல இந்த நியூஸை சொன்னா... விஷயத்தைக் கேள்விப்பட்டதிலேர்ந்து... கேமராவும் கையுமா அந்த வனாந்தரத்துக்கு... எப்படா போவோம்ன்னு... இருப்புக் கொள்ளாம நான் தவிக்கிறேன் தெரியுமா சிவா?"

விழிகளில் ஆர்வம் ததும்ப அவள் பேசியதைக் கேட்டதும் சிவாவுக்கும் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

"நீ இவ்ளோ துடிப்பும் ஆர்வமுமா பேசறதைப் பார்த்தா... அது கண்டிப்பா இண்ட்ரஸ்டிங் சப்ஜெக்டா இருக்கும் போலிருக்கே? அந்தத் திரில்லான நியூஸைப் பத்தி சொல்லேன். உனக்குன்னு எங்கேயிருந்து தான் இந்த மாதிரி விஷயங்கள் வந்து மாட்டுதோ? நான் ஒத்துக்கிறேன். நீ கெட்டிக்காரிதான்! சீக்கிரம் சொல்லு மித்தி! சஸ்பென்ஸ் வைக்கிற சமாச்சாரத்தை... உன் பத்திரிகையோட நிறுத்திக்கோ...

ப்ளீஸ் மா சொல்லிடு..."

காவ்யா கூறியதை ஒரு வரி விடாமல் ஒப்பித்தாள் மிதிலா.

"மைகாட்! அவங்கவங்க பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு அருள் வாக்கு சொல்றாங்களா?

இது ரொம்ப ஆச்சரியமான விஷயந்தான்... தீராத வியாதிக்கும் மருந்து தர்றாங்களாமா? வெல்டன்.... இது எல்லாத்தையும் விட நம்மை சிலிர்க்க வைக்கிற விஷயம் என்னன்னா... அடுத்து அடுத்து வாரிசு நாகம்மாங்கிற பேர்ல நீல விழிகளோட ஒரு சக்தி வாய்ந்த அம்மா தோன்றிக்கிட்டே இருக்காங்கங்கிறியே... இது ரொம்பவே அதிசயமாயிருக்கு மித்தி!

இது தொடர்பா நீ யார்கிட்டேயாவது இன்னும் டீடெய்ல்ஸ் திரட்டிக்கோ...

எடிட்டர் கிட்டே பேசறதுக்கு முந்தி... இன்னமும் நிறைய தகவல்களைத் தெரிஞ்சுக்கிட்டு பேசினா... நல்லாயிருக்கும். எடிட்டரும் மறுக்காம உனக்கு அனுமதி குடுத்துடுவாங்கல்ல?" படபடத்தான் சிவா.

"நீ சொல்லறது கரெக்ட் சிவா! நீல விழிகளோட தொடர்ந்து ஒரு மாதாஜி நாகம்மாங்கிற பேர்லேயும் உருவாகிறாங்கன்னு சொன்னதும்...

எனக்கும் புல்லரிச்சுப் போச்சு. இந்த மாதிரி வித்தியாசமான நல்ல செய்திகளை அலைஞ்சு திரிஞ்சு திரட்டினோம்னா.. நமக்கு நல்ல அனுபவம் கிடைக்கிறதோட நல்ல பேரும் கிடைக்குமே? நீ சொன்ன மாதிரி... காவ்யாவோட சித்தி தேனியில இருக்காங்களாம்... அவங்க நம்பரைக் கேட்டு வாங்கி இன்னும் சில டீடெய்ல்ஸை கலெக்ட் பண்ணிக்கிட்டு... அப்புறமா நான் எடிட்டர் கிட்டே பேசறேன். எனக்கென்னமோ எடிட்டர் இந்த மேட்டரை முடிச்சுட்டு வான்னு.. பர்மிஷன் குடுத்துடுவாங்கன்னுதான் தோணுது. அதுக்குப் பின்னாடி தான் ஒரு சிக்கல் வரும்."

"சிக்கலா? என்ன சிக்கல்?"

"மேற்குத் தொடர்ச்சி மலைப் பக்கம் போய் துப்பு துலக்கறதுக்கு... என்னை எங்கம்மா அனுப்பி வைப்பாங்களா? 'வயசுப் பொண்ணு.... அதுவும் ஒரே பொண்ணு... உன்னை எப்படி மலைக்காட்டுக்கு அனுப்ப முடியும்?'னு அம்மா போர்க்கொடி தூக்குவாங்களே? அதுவும் வனாந்தரத்துல மலை உச்சியில... குகைக்குப் போய் ஆராய அனுமதிப்பாங்களா? சித்தர்கள் இரவுலே நடமாடற வனப் பகுதி... குகை... ஜடாமுடியோட இருக்கிற சாம்யாரிணி.. அதுவும் பெரிய நீல விழிகளோட... அப்படின்னு சொன்னாலே... சுத்தமா போகவே விட மாட்டாங்க... 'அது அமானுஷ்யம்டி! காத்து கருப்பு – வயசுப் பொண்ணை அடிச்சுடும்டி'ன்னு வியாக்கியானம் பேசி... எல்லாத்துக்கும் முட்டுக்கட்டை போட்டுருவாங்களே?"

"அதைப் பத்தி நீ ஏன் கவலைப்படறே மித்தி! எடிட்டர் சம்மதிச்சுட்டா... உனக்கொரு கிரடிட் கிடைச்ச மாதிரி ஆயிடுமே? அத்தையை விட்டுத் தள்ளு... மாமா உன்னைப் புரிஞ்சுப்பாரே?

உன்னோட டேலண்ட்டை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பம் கிடைச்சிருக்குன்னு.. கந்தசாமி மாமாவே அத்தை கிட்டே எடுத்துச் சொல்லி.. அவங்க வாயை அடைக்கிறதுக்கு நான் ஏற்பாடு பண்றேன். அப்புறமென்ன? எதைப் பத்தியும் கவலைப்படாம இந்த மேட்டர்லே கவனம் செலுத்தி பிச்சு உதறு சரியா?"

"தே.. தேங் யூ சிவா"

"உம்..ரெண்டு பேரும் பேசி முடிச்சாச்சா? கொஞ்சம் விருந்து சமையலை கவனிப்போமா?

மித்தி! எங்கண்ணாவுக்கு... அதாவது உங்க சித்தப்பாவுக்கு வெங்காய



சாம்பாரும் ரவா இட்லியும் ரொம்பவே பிடிக்கும். மிளகாய் தனியாவை வறுத்து மசாலாவுக்கு அரைச்சுடு மித்தி. அப்போதான் சாம்பார் ருசியா இருக்கும். நெய்ப்பொங்கல், தேங்காய் சட்னி, தக்காளித் தொக்கும் பண்ணிடலாம். இந்து வெளிநாட்டுல வளர்ந்தவ... நம்மூர் பலகாரமா செய்து போட்டு அவளை அசத்திடணும். இடியாப்ப மாவுலே வெந்நீர் ஊத்திப் பிசைஞ்சு வச்சிருக்கேன். அப்பறமா நீ அச்சுல பிழிஞ்சுடு... தேங்காயைத் துருவி.. தேங்காய்ப் பாலெடுத்துடு.. காலிஃப்ளவர் ஃப்ரிஜ்லே இருக்கு. நீ அதை வச்சு காரசாரமா குருமா வைப்பியே? வச்சுடறியா மித்தி?" கோமதி உரிமையாய் அதட்டினாள்.

"வச்சுடலாம் அத்தே.. மெனு அவ்ளோ தானா? இன்னும் இருக்கா?"

"ஸ்வீட்டுக்கு... அவல் கேசரி செய்துட்டேன். இப்போதைக்கு இது போதும்... நீ கொஞ்ச நேரத்துக்கு முன்ன... சொல்லிட்டிருந்தே பாரு!

ஹாங்... ஒண்ணு சொல்ல மறந்துட்டேன் மித்தி.

ஜடாமுடி சாமியாரிணி... குகைக்குள்ளே இருந்து குறி சொல்ற நாகம்மாவுக்கு நீலக்கலர்லே விழிகள் இருக்கும்னு சொன்னியே? நீல விழிகள்னு சொன்னதைக் கேட்டதும்... எனக்கு டக்குனு எங்கண்ணா பொண்ணு இந்துவோட ஞாபகம் தான் வந்துச்சு"

"இந்துவோட ஞாபகம் வந்ததுக்கு என்ன காரணம் அத்தே? அவளை நீங்க இன்னமும் நேர்லே கூடப் பார்க்கலை இல்லியா? நாகம்மாவைப் பத்திப் பேசினா... நீங்க எதுக்கு அவளை நினைச்சீங்க?" முறுவலித்தபடி கேட்டாள் மிதிலா.

"காரணமிருக்கு மித்தி! எங்கண்ணா ஏர்போர்ட்டுக்கு கிளம்பறதுக்கு முன்ன ஃபோன்லே ஒரு விஷயத்தைச் சொன்னான். இந்துவுக்கு கண்ணு ரொம்பப் பெரிசாம்... அவளுக்கு நீல விழிகளாம்..."

"நீ...ல விழிகளா?" முணுமுணுத்துவளின் வலது கண்ணும் புருவமும் படபடவென்று துடித்தன.

'பெண்களுக்கு வலது கண் துடிக்கக்கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்களே?

ஏதாவது கெட்டது நடக்கப் போகிறதா?

இந்துவுக்கு பெரிய நீல விழிகளாமே!

என்னவொரு கோ–இன்சிடென்ட்?

நீண்ட தூரத்தில் வனாந்திரக் குகையிலிருக்கும் நாகம்மாவின் நீல

விழிகளை சந்திக்க வேண்டும் என்று உறுதி பூண்ட தருணத்தில்... இன்றே... இங்கேயே... இன்னும் சிறிது நேரத்தில் நீல விழிகளை நேருக்கு நேர் காணப் போகிறோமா?

நடக்கக் கூடாதது ஏதோ நடக்கப் போகிறது என்று இனம் புரியாத சங்கடம் ஏற்பட்டது. நீலவிழிகளைப் பற்றிய பேச்செடுக்கும்போது... வலது கண்ணும் புருவமும் துடிக்கிறதே? துணிவைத் திரட்டிக் கொண்டு... இந்த விஷயத்தை ஆராய முற்பட்டால் கண்டிப்பாக ஆபத்து நேரும் என்று தோன்றுகிறதே?'

அடி வயிற்றில் ஒரு பயப்பந்து வேகமாய் உருண்டது.




நெற்றியில் பூத்த வியர்வையை கர்ச்சீப்பால் ஒற்றியபடி வெளிப்பட்டாள் மிதிலா.

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

சிவா, கோமதி, ரகு, ரவி ஆகியோர் ஓடிச் சென்று... ராஜதுரையையும், இந்துவையும் முகமன் கூறி வரவேற்றனர்.

மிதிலா சற்றுத் தயங்கி... சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்த கோதண்டராமனின் அருகிலேயே நின்று கொண்டாள்.

அனைவரும் குசலம் விசாரித்து விட்டு... முன்னறை சோபாவில் அமர்ந்ததும்... ராஜதுரை முகத்தில் கேள்விக்குறியுடன் மிதிலாவை ஏற இறங்கப் பார்த்தார்.

"என்னண்ணே அப்படிப் பார்க்கிறே? நம்ம கந்தசாமி அண்ணாவோட மக மிதிலா... பணிவான பொண்ணு... படிச்சு முடிச்சுட்டு ஒரு பத்திரிகை ஆபீசுலே ஏதோ ரிப்போர்ட்டரா வேலை பாக்குது. ரொம்பப் பாசமா வருவா... நாள், கிழமைகள்லே எனக்கு சமையல்லே இருந்து எல்லா வேலைகளுக்கும் கூடமாட இருந்து ஒத்தாசை செய்வா. இன்னிக்குக்கூட சீக்கிரமாவே வந்து உதவினா..."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்மா... கந்தசாமியோட ஜாடை



அப்படியே இருக்கு... அப்பா அம்மா எல்லாம் சவுக்கியந்தானேம்மா?"

"நல்ல சவுக்கியம் சித்தப்பா! அவங்க நிதானமா வந்து உங்களைப் பார்க்கிறோம்னு சொல்லச் சொன்னாங்க"

"நிதானமாவே வரட்டும். என்ன அவசரம்? பை தி பை... ஷி இஸ் மை ஒன்லி டாட்டர் இந்து...

இவளும் என்னை மாதிரி ஒரு டாக்டர் தான்! வெளித் தோற்றத்துக்கு இவ ஒரு ஆங்கிலோ - இண்டியன் தான். ஆனா... இவளோட அம்மா மெர்ஸி நம்ம இந்து மதக் கோட்பாடுகள், பாரம்பரியம், கலாச்சாரம், சாஸ்திர சம்பிரதாயங்களை... ரொம்பவே மதிக்கிறவள்.

நான் ஒரு இண்டியன்... டாக்டர் என்கிற முறையில என்கிட்டே மதிப்பும் மரியாதையுமாத் தான் ஆரம்பத்துலே பழகினா...

யு நோ ஒன் திங்க்... அவ ஒரு நர்ஸ்... நாளடைவில அந்த நட்பு காதலா மாறிடுச்சு. கல்யாணம் செய்துகிட்டோம். மெர்ஸியோட ஆசை என்னன்னா... நம்ம மக இந்து... சாஸ்திர சம்பிரதாயங்களை மதிச்சு நடக்கிற உண்மையான இந்து மதப் பொண்ணா வளரணும்னும்ங்கிறதுதான். நானும் அப்படியே வளர்த்துட்டேன்.

தேவாரம், திருவாசகம், திருக்குறள், ராமாயணம், மகாபாரதம், பகவத் கீதைன்னு... அத்தனையையும் அவளுக்கு கத்துக் கொடுத்திருக்கேன். இங்க நம்ம நாட்டுலே இருக்கிற சித்த வைத்தியத்தைப் பற்றியும்... உயிர் காக்கிற மூலிகைச் செடிகளைப் பற்றியும் கூட நான் சொல்லியிருக்கேன். மூலிகைகளோட மகிமையைக் கேள்விப்பட்டதிலேர்ந்து அதைப் பத்தி இங்க வந்து ஆராய்ச்சி பண்ணணும்னு துடிச்சுட்டிருக்கா...

தன்னோட பொண்ணு ஒரு முழுமையான ஹிண்டு என்கிற மனத்திருப்தியோட தான்... மெர்ஸி கண்ணை மூடினா. உறவுகளோட கூட பாச பந்தமா பிணைந்து வாழணும்னு மெர்ஸிக்கு ஆசைதான்... ஆனா அதுக்கு அவ குடுத்து வைக்கலை.

இந்துவுக்காவது அந்தக் கொடுப்பினை வாய்க்கணும். அம்மாடி மிதிலா! உறவு முறையிலே இவ உனக்கு சகோதரி தானே? அடிக்கடி வந்து இவ கிட்ட க்ளோஸா பழகு! உங்க வீட்டுக்கும் அழைச்சுட்டுப் போ... இந்து கள்ளம் கபடம் அறியாதவள். பாசத்துக்கு ஏங்கறவள்...

ரொம்ப சீக்கிரமாவே எல்லோர்கூடவும் ஒட்டிப்பா... பழகிப் பாரும்மா... நீயே புரிஞ்சுப்பே..." ராஜதுரை உரிமையாய் அவளிடம் பேசிமுடித்தபோது...

அவரது நா தழுதழுத்துப் போனதைக் கண்டதும்... மிதிலா உள்ளூர நெகிழ்ந்து தான் போனாள்.

"கண்டிப்பா சித்தப்பா! இந்து என்னோட சகோதரி மட்டுமில்ல... நல்ல ஃபிரண்டும் கூட..." என்று கூறிவிட்டு மெல்ல இந்துவை ஏறிட்டாள்.

ஓங்கி உயரமாக மெழுகுச்சிலை போல் நிகுநிகுவென்று கண்களை வசீகரித்தாள் இந்து.

தாய் மெர்ஸியைப் போன்று இந்துவிற்கு பால் நிறம்; தந்தை ராஜதுரையைப் போன்று கருகருவென்ற நிறத்தில் கூந்தல், கூர் மூக்கு, கண்ணாடியாய் பளபளத்த கன்னங்கள்...

இயற்கையிலேயே செவேலென்று சிவந்த இதழ்கள், சங்குக்கழுத்து, கொடி இடை என்று ஒட்டுமொத்த அழகைக் குத்தகைக்கு எடுத்திருந்தாள்.

சிரித்த முகத்துடன் அதுவரை பார்வையைத் தழைத்துக் கொண்டிருந்தவள்... மிதிலா வாத்சல்யத்துடன் பேசியதும் சட்டென்று விழிகள் விரிய நோக்கினாள்.

அகண்ட நீண்ட நீல நிற விழிகள்... பூஞ்சிறகாய் படபடத்த கரிய இமைகள்.

மிதிலாவுக்கு உடம்பு உதறிப் போட்டது.

அத்தை கோமதியின் மூலம் ஏற்கெனவே விஷயத்தைக் கேள்விப்பட்டிருந்தும்... நேரடியாகப் பார்க்கும்போது... திடீரென்று யாரோ பனிக்கட்டி கத்தியால் நெஞ்சில் குபீரென்று குத்தியதைப் போன்று திக்கென்றிருந்தது. குப்பென்று வியர்த்துப் போனது.

மீண்டும் வலது கண்ணும் புருவமும் படபடவென்று துடிக்கத் தொடங்கின.

திகிலுடன் வைத்தகண் வாங்காமல்... இந்துவையே பார்த்தபடி இருந்தாள் மிதிலா.

'இந்து ஒரு ஆங்கிலோ - இண்டியன்! இவளது தாயார் ஒரு வெள்ளைக்காரி.

இந்துவுக்கு அவளது தாயாரைப் போன்று நீல நிறத்தில் விழிகள் அமைந்து விட்டன.

பொதுவாக வெள்ளைக்காரர்களுக்கு நீல விழிகள் தானே வாய்க்கும்? இந்துவின் விழிகள் நீலநிறத்தில் இருப்பது இயல்பு தானே?

ஒரு இயல்பான விஷயத்தைக் கண்டு... நான் ஏன் திடுக்கிட வேண்டும்?



பயந்து நடுங்க வேண்டும்? அடிப்படையில் நானொரு துணிச்சலான பெண் தானே? இந்த சாதாரண விஷயத்திற்குப் போய்... ஏன் குழம்பி வியர்த்து வழிகின்றேன்?

ஊகூம்! இது சாதாரண விஷயமல்ல...

நாகம்மாவின் நீல விழிகளைப் பற்றி மும்முரமாகப் பேசும்போது... இவளும் அதே நீல விழிகளுடன் வந்து இறங்கியிருக்கிறாள்.

அதற்கும் இதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது என்று என் உள்ளுணர்வு சொல்கின்றதே?

பல விஷயங்களில்... என் உள்ளுணர்வின் கணிப்பு துல்லியமாய் நடந்துவிடுமே?

மேலோட்டமாகப் பார்த்தால்... ஏதோ மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவதாகத் தான் இருக்கும். ஆனால்... ஏதோ ஒரு சம்பந்தம்... அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயம் இருக்கத்தான் வேண்டும். ஆம்! நிச்சயமாய் அப்படித்தான்!'

மிதிலாவின் மனத்திற்குள் பட்டிமன்றப் போராட்டமே நடந்து கொண்டிருந்தது.

"வணக்கம் மிதிலா! உங்களைப் பார்த்ததிலே... எனக்கு ரொம்ப மகிழ்ச்சி" தமிழில், தேன் போன்ற இனிய குரலில் மிழற்றியபடி இந்து கரங்களைக் குவித்தாள்.

நினைவுச் சங்கிலி சட்டென்று அறுந்து விழ... வலிய வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் இந்துவைப் பார்த்தாள்.

பாவம்! சமீபத்தில் தாயை இழந்த பெண். பாசத்திற்கு ஏங்குபவள்... இவள் எனது தங்கை.

உள்ளூர தோன்றிய பயத்தையும் திகிலையும் வலுக்கட்டாயமாக ஒதுக்கி விட்டு... நெஞ்சில் சுரந்த பாச உணர்வு முகத்தில் அப்பட்டமாய்ப் பிரதிபலிக்க... விருட்டென்று நடந்து போய் இந்துவின் தளிர்க்கரங்களை சிநேகமாய்ப் பற்றிக் கொண்டாள் மிதிலா.

"வணக்கம் இந்து! உன்னை சந்திச்சதிலே... எனக்கும் ரொம்ப மகிழ்ச்சிதான்... இந்த மண்ணுல பொறந்தவங்க... நம்ம நாட்டுப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் மறந்துட்டு... மேல்நாட்டுக் கலாச்சாரத்தைப் பின்பற்ற ஆரம்பிச்சுட்டாங்க...

அதையெல்லாம் பார்க்கிறப்போ... வேதனையில இதயத்துல ரத்தம்

வடியறாப்பல இருக்கும்.,

ஆனா நீ... அமெரிக்காவிலேயே பொறந்து வளர்ந்த பொண்ணு!

இந்த மண்ணையும் பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் ரொம்ப நேசிக்கிறே பாரு...

அப்படியே வயித்துல சில்லுனு அபிஷேகப் பாலை வார்த்தாற்போல இருக்கு இந்து... நீ தமிழ்லே பேசறதைக் கேட்கும் போது... குழலையும் யாழையும் வீணையையும் மீட்டினாற்போல்... அவ்ளோ இனிமையா இருக்கும்மா... மூலிகைகளைப் பத்தி ஆராய்ச்சி பண்ண ஆசைப்படறியாமே. ரொம்ப நல்ல விஷயம்...

உன்னோட ஆராய்ச்சி வெற்றி அடைய... அட்வான்ஸ் வாழ்த்துக்கள்...

என்ன ஹெல்ப் வேணும்னாலும் தயங்காம கேளு... இந்த மண் தந்த பொக்கிஷம் மூலிகைச் செடிங்க... என்னால முடிஞ்ச மட்டும் இதைப் பத்தின தகவல்களைத் திரட்டிட்டு வர்றேன் சரியா?"

"ரொம்ப ரொம்ப நன்றி!"

"நமக்குள்ளே நன்றியெல்லாம் சொல்லக்கூடாது" என்று கூறியபடி இந்துவின் பூங்கன்னத்தில் செல்லமாய் தட்டினாள்.

"அப்படியா? ஸாரி"

"ஊகூம்! நமக்குள்ளே ஸாரி என்கிற வார்த்தையை உபயோகிக்கக்கூடாது. நெருங்கின உறவுக்குள்ளே உரிமை மட்டும்தான் இருக்கணும். சரியா?"

"சரி தான்."

பார்த்த மாத்திரத்தில் இந்துவுடன் கோந்து போட்டு ஒட்டின தினுசில் நெருங்கி விட்டாள்தான்.

ஆனாலும் மிதிலாவுக்கு... அவளது நீல விழிகளை நேருக்கு நேர் ஏறிட்டுப் பார்க்கும்போது... உள்ளூர ஏதோ நெருடிக் கொண்டே இருந்தது நிஜம்!

அதன்பின்... பேச்சு சுவாரசியத்தில் நேரம் பறந்ததே தெரியவில்லை.

காலை டிபனை அனைவருக்கும் அவள் பரிமாறும்போது "மித்திக்கு நல்ல கைப்பக்குவம்! இதுல பாதிக்கு மேல அவ செய்தது தான்" என்று கோமதி பாராட்டுப் பத்திரம் வாசித்தது தான் தாமதம்...

"வாவ்! எல்லாமே சூப்பர்பா இருக்கு மித்தி! உன்கிட்டே கத்துக்க வேண்டியது நிறைய இருக்கு போலிருக்கே? உன்னை நான் இனிமே



விடப் போறதில்லை பாரேன்!" –இந்து சிரித்தாள்.

"விடாதே அவளை... கெட்டியா பிடிச்சுக்கோ" –கலாய்த்தான் சிவா.

"முக்கியமான வேலை இருக்கு. ஆபீசுக்குக் கிளம்பணும்னு சொன்னியே மித்தி? உன் ஃபிரண்டோட சித்திகிட்ட பேசி டீடெய்ல்ஸை மறக்காம கலெக்ட் பண்ணிட்டு... அப்புறமா எடிட்டர் கிட்ட பேசு. ஆபீசுக்குப் போனதும் மறக்காம எனக்கு ஃபோன் பண்ணு"

"கண்டிப்பா பண்றேன் சிவா!" என்றபடி டீப்பாயிலிருந்த ஹேண்ட் பேக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

"சித்தப்பா... நான் வரட்டுமா? இந்து... சாயந்தரம் பார்க்கலாம் ஸீ யூ... பை!"

ஆபீசுக்குச் செல்லும் வழியிலேயே ஸ்கூட்டியை ஓரங்கட்டி நிறுத்தி காவ்யாவிடமிருந்து போன் நம்பரை வாங்கி, அவளது சித்தியுடன் தொடர்பு கொண்டாள்.

அவளது சித்தி கூறிய தகவல்களைக் கேட்க கேட்க... திகிலும், பயமும், கிலியும், பீதியும் போட்டி போட்டுக் கொண்டு மிதிலாவை ஆக்கிரமித்தன.

பதற்றத்தில் கை விரல்கள் பனிக்கட்டியாய் சில்லிட்டன. இந்த மேட்டரில் அவசியம் இறங்கத்தான் வேண்டுமா? இதை இப்படியே விட்டு விட்டால் என்ன? எதற்கு வீணாக வம்பை விலை கொடுத்து வாங்க வேண்டும்?'

மறுகணமே மனதைத் தட்டி அடக்கினாள்.

'ஊகூம்! நான் தைரியசாலி... முன்வைத்த காலைப் பின் வைக்க மாட்டேன். என்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையில் தானே... காவ்யா மெனக்கெட்டு ஃபோன் செய்து விஷயத்தைக் கூறினாள்? அதுவும் அவளது சித்தி சொன்ன தகவல்களைக் கேட்ட பின்பு இந்த மேட்டரைக் கை விட முடியாது. மேற்குத் தொடர்ச்சி மலையில் நடப்பது என்ன? மூடநம்பிக்கையா? புரளியா? இல்லை... அறிவுக்கு அப்பாற்பட்ட சக்தியா? தெய்வச் செயலா? சித்து வேலையா?

எதுவாக இருந்தாலும் சரி... துப்பு துலக்கி ஆராய்ந்து உண்மையை வெட்ட வெளிச்சமாக்குவது என் கடமை!'

உள்ளூர உறுதிபூண்ட வேளையில்... மீண்டும் வலது கண் துடித்தது.




'லேடீஸ் ஒன்லி' பத்திரிகை அலுவலகத்தை அவள் அடைந்தபோது– படபடப்பு இன்னமும் அடங்கவில்லை.

ஸ்கூட்டியை பார்க் செய்து விட்டு– நெற்றியில் வந்து புரண்ட முடிக்கற்றையைப் புறங்கையால் ஒதுக்கி விட்டபடி... உள்ளே நுழைந்தாள்.

கண்ணாடி கேபின் வழியே பார்த்தபோது... எடிட்டர் மட்டுமே தனித்திருப்பது தெரிந்தது.

சாவகாசமாக ஏதோ ஃபைலைப் புரட்டிக் கொண்டிருந்ததைக் கண்டதும்... இதை விட்டால் வேறொரு நல்ல சந்தர்ப்பம் அமையாது என்று தோன்ற... சட்டென்று கேபினுக்குள் புகுந்தாள் மிதிலா.

"எக்ஸ்க்யூஸ் மீ மேடம்... குட் மார்னிங்!"

"குட்மார்னிங் மித்தி! டேக் யுவர் ஸீட்... என்னம்மா? ஏதாவது இண்ட்ரஸ்டிங் விஷயம் இருக்கா?" முறுவல் பூத்தார் எடிட்டர் சரஸ்வதி.

தங்க பிரேமிட்ட கண்ணாடி மிகப் பாந்தமாய் பொருந்தி இருந்தது. வயது ஐம்பதுக்கு மேலிருக்கும்.

பெயருக்கு ஏற்ப முகத்தில் சரஸ்வதி களை தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

காவ்யா காலையில் தனக்கு ஃபோன் செய்த விவரத்தைத் தெரிவித்தாள் மிதிலா.

"ஐ... ஸீ! எனக்கென்னமோ இது வந்து... பழைய – பிரேமானந்தா வாயில லிங்கம் எடுத்த மாதிரி– எதாவது உல்டாவா இருக்கும்னு தோணுது" லேசாக சரிந்த மூக்குக் கண்ணாடியை ஆள் காட்டி விரலால் தள்ளிவிட்டுக் கொண்டே பேசினார் சரஸ்வதி.

"இதைப் பற்றி டீடெய்லா... காவ்யாவோட சித்தி கிட்டே நான் விசாரிச்சேன் மேடம்! அவங்க சொன்ன தகவல்... இன்னும் த்ரில்லிங்கா... இண்ட்ரஸ்டிங்கா இருக்கு மேடம்..."

எடிட்டர் சரஸ்வதி மேஜையின் மீது இரு முழங்கைகளையும் ஊன்றி... தன் முகத்தை இரு கரங்களால் தாங்கிக் கொண்டார்.



சுவாரசியமான விஷயத்தில் அவர் இன்வால்வ் ஆகி விட்டால் இப்படித் தான் நடந்து கொள்வார் என்பது மிதிலாவுக்குத் தெரியுமாதலால்... தொண்டையைக் கனைத்துக் கொண்டு தொடர்ந்து பேசினாள்.

"சுருளி மலை அடிவாரத்துல பூத நாராயணர் கோவில் இருக்கு மேடம்.. அந்தக் கோவில்லே இருந்து கொஞ்ச தூரம் நடந்தா சின்ன ஆறு குறுக்கே வரும். ஆத்தைத் தாண்டி சுமார் மூணு கிலோ மீட்டர் தூரத்துக்கு மேலே ஏறணும்மாம். குண்டும் குழியுமா கரடு முரடா ஒத்தையபடி பாதை வழியே மேலே ஏறணும்.

மலைப் பாதையில கைலாச குகை, விபூதி குகை, நாகம்மா குகைன்னு நிறைய இருக்காம்.

வலது பக்கம் அதல பாதாளம் தானாம்... இடது பக்கத்துப் பாதையில் இருந்து மேலே போகப் போக மூணு நாலு பாதை பிரியுமாம். எந்தப் பக்கமும் திரும்பாம... நேர்ப்பாதையில போனா... சுருளியாண்டவர் சன்னதி வருமாம். அதுவும் குகைக் கோவில் மாதிரி தானாம். குகைன்னா பாறையால அமைஞ்ச குகை கிடையாது. மர வேர்களால பின்னிப் பிணைஞ்சு உருவான குகையாம். குகைக்கு மேலே தீர்த்தம் கசியுதமாம்.. இது தீராத வியாதிகளைத் தீர்க்கிற தீர்த்தமாம்... இந்தத் தீர்த்தத்தைக் குடிச்சா உடம்புக்கு வஜ்ர பலம் வந்துடுமாம்... இந்தத் தீர்த்தம் பட்டு பட்டு தான் வேர்கள் எல்லாம் வஜ்ரம் பாய்ஞ்சாப்பல இறுகி... பாறை போல ஆயிடுத்தாம். பார்க்க பாறை போல் குகை இருந்தாலும் எங்க தட்டினாலும் டொக்.. டொக்னு மரத்தைத் தட்டினா வர்ற சவுண்ட் தான் கேட்குதாம்..."

"மரமே பாறையா இறுகிப் போச்சா? வெரி இண்ட்ரஸ்ட்டிங்!"

"சுருளி மலையோட பிரதான தெய்வமே இங்கே தான் இருக்காரு போல... இந்த சன்னதிக்கு இடது பக்கமாத்தான் நாகம்மா குகை இருக்காம்.. ஒவ்வொரு பௌர்மணி அன்னிக்கும் நாகம்மா அந்தக் குகையை விட்டு வெளியே வருவாங்களாம்... நாகம்மா குகையிலிருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தூரத்துல... மலை உச்சியில... பெரிய ஆலரமத்துக்கு அடியில சுயம்பு நாக பைரவி கோவில் இருக்காம்.

ஒவ்வொரு பௌர்ணமிக்கும் சுயம்பு நாக பைரவிக்கும் நாகம்மா பூஜை செய்வாங்களாம்.

கோவில் பூசாரியும்... பரதேசி, ஆண்டிக் கோலத்துல திரியற சாமியார்களும் தாராளமா பூஜையில கலந்துக்கலாமாம்.. மத்தபடி வெளியில

இருந்து வர்ற பக்தர்களுக்கு... அதைப் பார்க்க அனுமதி கிடையாதாம்.

பூஜையை முடிச்சுட்டு 'நாக பைரவி'யை மூணு வாட்டி வலம் வந்துட்டு- பிரமாண்டமான ஆல விருட்சத்துக்கு இடது பக்கத்துல இருக்கிற 'பைரவி குகை' வாசலுக்கு நாகம்மா வருவாங்களாம்...

அந்த பைரவி குகை வாசல் ரொம்ப சின்னதா இருக்குமாம். தரை மட்டத்திலிருந்து ஒரு அடி அளவுக்குதான் இருக்குமாம். நாகம்மா அந்தக் குகை வாசல்லே சாஷ்டாங்கமா விழுந்து கும்பிட்டுட்டு அப்படியே ஒரு பாம்பு மாதிரி நெளிஞ்சு வளைஞ்சு அந்தக் குகைக்குள்ளே போயிடுவாங்களாம்... அவங்க குகைக்குள்ளே போனதுமே... குகை வாசல் சட்டுனு மூடிக்குமாம்..."

"சாதாரண குகைன்னாலே... காத்தோட்டமும், வெளிச்சமும் சுத்தமா இருக்காது.

இந்த பைரவி குகை வேற ரொம்பச் சின்னதா படுத்துக்கிட்டு ஊர்ந்து போகும்படியா இருக்கே?

உள்ளே போற நாகம்மாவோட கதி? பௌர்ணமி தினத்துல... அந்தச் சின்ன குகைக்குள்ளே புகுந்து என்ன செய்வாங்களாம்?"

ஆர்வம் தாளாமல் இடை புகுந்து கேட்டார் சரஸ்வதி.

"பைரவி குகையிலிருந்து நேரா சதுரகிரி மலைக்கே அவங்க போயிடுவாங்களாம்...

நாக பைரவிக்கு பூஜையை முடிச்ச கையோட.... இந்த குகை வழியா போயி 'சதுரகிரி மகாலிங்க'த்தை தரிசனம் செய்வாங்களாம்... பௌர்ணமி தினத்துல ஜடாமுடியோட இருக்கிற சில சித்தர்களும் நாக பைரவியை தரிசிக்க வந்துடுவாங்களாம்... நாக பைரவி கோவிலைச் சுத்தி... அந்த மலையில நிறைய மூலிகைங்க இருக்காம்...

விலை மதிப்பில்லாத மூலிகைச் செடிங்களை அபகரிக்க வந்தவங்களும்- நீலவிழிகளோட குறி சொல்ற நாகம்மாவையும், 'நாகம்மா குகை'யையும்... பௌர்ணமி நாள்லே நடக்கிற நாக பைரவி பூஜையையும் ஏதோவொரு உள்நோக்கத்தோட.... ஆர்வக் கோளாறுல ஆராய முற்பட்டவங்களும் எசகு பிசகா மாட்டியிருக்காங்களாம்."

"மாட்டிக்கிட்டாங்களா? யாரு கிட்ட?"

"காவ்யாவோட சித்தி தனக்கு அரசல் புரசலா தெரிஞ்ச சங்கதியை ஒண்ணு விடாம சொன்னாங்க...



யாரு கிட்ட மாட்டினாங்க... யாரு தண்டனை தர்றாங்க அப்படிங்கிறதெல்லாம் புரியாத புதிரா இருக்காம்...

ஆனா, ஆராயப் போனவங்களுக்கு சரியான தண்டனை கிடைச்சிருக்காம்... கை கால்கள் முடங்கி ஊனமா கிடக்கிறாங்களாம்.... சுயம்பு நாக பைரவி கோவிலுக்கு முன்னால அவங்க துளசி மாலையைக் கையில் வச்சுக்கிட்டு சதா ஜபிச்சுக்கிட்டே இருக்காங்களாம்.... பரதேசிங்க, ஆண்டிகளுக்கு மத்தியில அவங்களும் உட்கார்ந்து... செஞ்ச தப்புக்கு பிராயச்சித்தமா கண்ணீர் வடிச்சு பிரார்த்தனை செய்றாங்களாம்..."

"மைகாட்! தண்டனை ரொம்ப கொடூரமா இருக்கே? சரி மித்தி... விஷயத்துக்கு வருவோம்...

மேட்டரை விரிவா சொல்லிட்டே! உண்மையிலேயே ரொம்ப த்ரில்லிங்கா – இண்ட்ரஸ்ட்டிங்கா தானிருக்கு. மேற்கொண்டு என்ன ஐடியா வச்சிருக்கே மித்தி?"

"அது வந்து... மேட்டர் படு சூடான மேட்டர் மேடம்! நான் உடனே மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் புறப்படணும். எல்லாத் தகவல்களும் உண்மையா இல்லையான்னு அலசி ஆராய்ஞ்சுடணும்..."

"ஆராயப் போனாலே ஆபத்து வந்துரும்னு சொல்றாங்களே? அப்படி ரிஸ்க் எடுத்து இதுல இறங்கி... உன் கட்டுரையைப் பிரசுரம் பண்ணனுமா மித்தி?"

"ஆபத்து உண்மையிலேயே வருதா... இல்ல... இந்த மாதிரி யாராவது ஆராய வந்துட்டா என்ன பண்றதுன்னு அவங்களே கட்டிவிட்ட புரளியான்னு நமக்குத் தெரியாதுல்ல மேடம்?

லைஃப்லே நாம ரிஸ்க் எடுக்கப் பயந்தோம்னா எதையுமே சாதிக்க முடியாதே?

இந்த அஸைன்மென்ட்டைப் பண்ணியே தீரணும்னு உள்ளூர ஒரு உறுதி பிறந்துடுச்சு மேடம்!"

"சரி... உங்க வீட்டுல சம்மதிச்சா... நீ தாராளமா போயிட்டு வா. இதை உன் சொந்த விருப்பத்துல தான் செய்யறே. அப்படிச் செய்யும்போது ஆபத்து எதுவும் ஏற்பட்டா... அதை நீ சமாளிச்சு ஜெயிச்சுக்காட்டணும். வேணும்னா உன் துணைக்கு ஸ்டாஃப் ரிப்போர்ட்டரைக் கூட அனுப்பி வைக்கட்டுமா?"

"வேண்டாம் மேடம்! இந்த அஸைன்மென்ட்டை துணிஞ்சு தனியா நானே பண்ண முடியும்னு நம்பிக்கை இருக்கு. என்னைப் பத்தி நீங்க வீணா கவலைப்படாதீங்க. அனுமதி மட்டும் கொடுங்க... அது போதும்."

"இவ்ளோ தைரியமா பேசறே... ஓ.கே.! நீ எடுக்கற ரிஸ்க்கோட டெப்த்தை வச்சு சொல்றேன். ஆர்ட்டிகிளை அதுக்குண்டான வேல்யூவோட கவர் ஸ்டோரியாவே போட்டுலாம் மித்தி!

என்ன அப்படிப் பார்க்கிறே? இந்த ஆர்வம் துளி கூட குறையாம இதே தைரியத்தோட இறங்கி செயல்படும்மா... எந்த நல்ல விஷயத்தையும் எந்த ஒரு பத்திரிகையும் சும்மா விடாது. நான் பாத்துக்கிறேன். விஷ் யூ ஆல் தி பெஸ்ட் மித்தி!"

"தே... தேங்க் யூ ஸோ மச் மேடம்" ஆனந்தத்தில் அவளது விசாலமான விழிகளில் 'குபுக்' என்று வெப்ப நீர் ஊற்றெடுத்தது.

"உன்னோட பேரண்ட்ஸை எப்படி 'கன்வின்ஸ்' பண்ணுவே? அவங்க இதுக்கு சம்மதிப்பாங்கன்னு... எனக்குத் தோணலை." – கூறியபடி இதமாய் புன்னகைத்தார் எடிட்டர் சரஸ்வதி.

"எனக்கு உங்க அனுமதிதான் முக்கியம் மேடம்! பேசற விதத்துல பேசி எப்படியாவது சம்மதத்தை வாங்கிடுவேன் மேடம்... வாய்ப்பை நான் நழுவ விட மாட்டேன். அப்போ நான் நாளைக்கே கிளம்பலாமா மேடம்?" – எழுந்து நின்றாள்.

"ஷ்யூர்! டேக் கேர் மித்தி... உன்னோட முயற்சி வெற்றியடைணும்னு நான் பிரே பண்ணிக்கிறேன்." என்றபடி கை குலுக்கினார்.

"தேங்க்யூ மேடம்" – அவள் விருட்டென்று திரும்பி நடந்தபோது... தழையக் கட்டியிருந்த புடவையில் செருப்பு மாட்டி... குபீரென்று தடுக்கி விட்டது.

தடுமாறி விழப் பார்த்தவள் நொடிப் பொழுதில் சமாளித்து நின்று திரும்பிப் பார்த்தாள்.

"நல்ல வேளை! எடிட்டர் மேடம் கவனிக்கவில்லை. ஏதோ ஃபைலைப் புரட்டற மும்முரத்துல இருக்காங்க..." தனக்குள் முணுமுணுத்தபடி கேபினை விட்டு வெளியேறினாள்.

'இது அபசகுனமாக இருக்குமோ...?' என்ற கேள்வி கொக்கியாய் வளைந்து... அவளது இதயத்தைப் பிறாண்டியது.






மொட்டை மாடி! கைப்பிடிச் சுவரின் மீது தென்னங்கீற்றோலை செல்லமாய் புரண்டு கொண்டிருந்தது.

தென்னங் கீற்றோலையை லேசாகத் தடவியபடி நின்று கொண்டிருந்தாள் மிதிலா.

"என்ன மித்தி? டென்ஷனா இருக்கே? முகத்தைக் கலகலன்னு வச்சுக்கோ... இல்லேன்னா அத்தைக்கு ஏதாச்சும் சந்தேகம் வந்துடப் போகுது."

"இதுவரைக்கும் நான் எதுக்குமே பொய் சொன்னதில்ல... பெரியவங்க கிட்டே பொய் சொல்லி ஏமாத்திட்டுப் போறோமே... போற காரியம் வெற்றி அடையணுமேன்னு... கவலையா இருக்கு சிவா."

எதிரில் நின்றிருந்த இந்து, சிவாவையும் மதிலாவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அதுக்கும், இதுக்கும் என்ன சம்பந்தம் மித்தி? போற காரியம் சக்ஸஸ் தான்! நம்பிக்கையோட இரு...

இதோ பாரு... எடிட்டர் அனுமதி கொடுத்ததுமே... எனக்கு ஃபோன் பண்ணினே இல்லையா?

அப்போ நீ சொன்னது ஞாபகமிருக்கா இல்லையா?

'எடிட்டர் மேடம் அனுமதி கொடுத்து 'ஆல் தி பெஸ்ட்' சொல்லிட்டாங்க... அவங்களுக்கே சந்தேகம் வந்துடுச்சு...

உங்க பேரண்ட்ஸை எப்படி கன்வின்ஸ் பண்ணுவே?ன்னு கேட்கிறாங்க சிவா'ன்னு சொன்னியா இல்லையா?"

"ஆமா... சொன்னேன் தான்."

"அதான்... அதுக்குத் தான் நான் இந்த ஐடியா கொடுத்தேன். கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாம போகக் கூடாதுல்லியா?

அதனால்தான்... 'மேட்டரை அப்படியே மூடி மறைச்சுடு மித்தி! சும்மா... மேற்குத் தொடர்ச்சி மலைப் பக்கம் ஒரு அஸைன்மெண்ட்டுக்காக... ஒரு வயசான ஃபாரஸ்ட் ஆபீஸரைப் பார்க்கப் போறதா... பொய் சொல்லச் சொன்னேன்.

துணைக்கு நானும் ஒரு லேடி ஸ்டாஃப் ரிப்போர்ட்டரும் வருவாங்கன்னு சொல்லச் சொன்னேன்.

அவங்களும் சம்மதிச்சுட்டாங்க... அடுத்த நிமிஷமே டிக்கெட்ஸ் கூட புக் பண்ணியாச்சு. இனியும் என்ன தயக்கம்?"

"இல்ல... எனக்காக நீயும் இந்துவும் கூட வர்றீங்களே? அங்க... போற எடத்துல... வனாந்தரத்துல ஆபத்து வரும்னு வேற பேசிக்கிறாங்களே?

எனக்கு ஏதாச்சும் ஆனா கவலையில்லை... என்னோட சுயநலத்துக்காக – உங்களை அழைச்சுட்டுப் போயி... உங்களுக்கு ஏதாச்சும் ஆபத்து வந்துடுத்துன்னா...? அதை நெனச்சாத்தான் பயமா இருக்கு சிவா!

என்னோட மேட்டருக்காக... ராஜதுரை சித்தப்பா கிட்டே நீயும் இந்துவும் பொய் சொல்லும்படியா ஆயிடுச்சே?" தழுதழுத்தாள் மிதிலா.

"பைத்தியம் மாதிரி பேசாதே மித்தி? இதுலே எங்கே உன்னோட சுயநலம் இருக்காம்?

இது சுயநலம் கிடையாது. பொது நலத்துக்குத்தான் நீ கிளம்பறே... தெரிஞ்சுக்கோ! உன்னோட கட்டுரை மூலமா உலகத்துக்கு சில உண்மைகளை வெட்ட வெளிச்சமாக்கறதுக்குப் புறப்படறோம். அவ்வளவு தான்!

உனக்கு ஹெல்ப் பண்ணினா... எங்களுக்கும் ஒரு ஆத்ம திருப்தி கிடைக்குதா? அத்தோட இதை மாதிரி அட்வென்ச்சரை தேடிப் போறதுலே எனக்கும் அலாதி ஆர்வம் தான்!

அத்தோட... இந்துவுக்கு மூலிகைச் செடிங்களை ஆராயறதுக்கு ஒரு வாய்ப்பு கிடைச்சிருக்கே?

உன்னோட ஃபோன் வந்தப்போ... இந்து கிட்டக்கதான் இருந்தா... ஆர்வமா என்ன ஏதுன்னு விசாரிச்சா.

நானும் 'மேட்டரை'ப் போட்டு உடைச்சேன். அவளுக்கும் சுவாரசியமும் ஆர்வமும் வந்துடுச்சு. 'நானும் கூட வர்றேன்'னு பிடிவாதம் பண்ணிட்டா... என்ன பண்றதுன்னு யோசிச்சேன்.

ராஜதுரை மாமாகிட்டே... 'ஒரு அஸைன்மெண்ட் விஷயமா ஃபாரஸ்ட் ஆபீஸரைப் பார்க்க மித்தி கிளம்பறா... துணைக்கு நானும் கிளம்பப் போறேன்'னு சொன்னேன்.

அந்த சமயத்துல இந்துவும்... "டாடி! இது நல்ல சந்தர்ப்பம். மூலிகைங்க பத்தி நானும் நிறைய தெரிஞ்சுக்கணும்.



அந்த ஃபாரஸ்ட் ஆபீஸரை சந்திக்கணும்"னு சொன்னா...

'சரி தாராளமா போயிட்டு வாங்க... நானும் வரட்டுமா?'ன்னு கேட்டாரு.

'வேண்டாம் மாமா! மித்தி கூட இன்னுவும் ஒரு லேடி ஸ்டாஃப் வருவாங்க.'

யங்ஸ்டர்ஸா போயிட்டு வரோம் மாமா... நீங்க எதுக்கு சிரமப்படுறீங்க?'ன்னு அவரைத் தடுத்து சமாளிச்சிட்டேன். டிரஸ் எல்லாம் எடுத்து வச்சு 'பேக்' பண்ணியாச்சு. இன்னும் ரெண்டு மணி நேரத்துல 'கால் டாக்ஸி' வந்துடும். மூணு பேருமா கிளம்பி... டீலக்ஸ் பஸ்லே ஏறி... கண்ணை மூடிப் படுத்தோம்னா... காலையில தேனியில இருப்போம். அங்கேயிருந்து மினி பஸ்ஸைப் பிடிச்சு சுருளியில இறங்கிட வேண்டியது தான்... நீ வீட்டுக்குப் போ மித்தி! 'கால் டாக்ஸி' வந்ததும் நாங்க ரெண்டு பேரும் ஏறி உங்க வீட்டுக்கு வந்துடறோம். சரியா?"

மிதிலா அரை மனதுடன் தலையாட்டின வேளையில்... இந்து அவளை நெருங்கி சிநேகமாய் தோளில் கை போட்டாள்.

"பொய்மையும் வாய்மை யிடத்து புரை தீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" அப்படின்னு திருவள்ளுவரே சொல்லியிருக்காருல்ல மித்தி?

நல்ல விஷயத்துக்காக ஒரு சின்னப் பொய் சொன்னா... அது தப்பே இல்ல... ஏன் கில்ட்டியா ஃபீல் பண்றே மித்தி? டேக் இட் ஈஸி. போய் தூள் கிளப்பிட்டு வரலாம். சரியா? அதோட எனக்கும் ஒரு நல்ல சான்ஸ் கிடைச்சிருக்கே? வந்த மறுநாளே மலைக்காட்டுக்குப் போய்... மூலிகைச் செடிங்களை நேரடியா பார்க்கிறதுக்கு சந்தர்ப்பம் அமைஞ்சிருக்கே?

என்னோட மூலிகைச் செடிகளைப் பத்தின ஆராய்ச்சிக்கு உதவறேன்னு வாக்கு கொடுத்திருக்கியே? மறந்துட்டியா மித்தி? நீ உன்னோட மேட்டரைப் பத்தி ஆராய்ச்சி பண்ணு... நான் மூலிகைச் செடிங்களைப் பத்தி ஆராயறேன். இந்தப் பயணத்துல நம்ம ரெண்டு பேத்தோட வேலையும் ஏக காலத்துல நடக்கும் இல்லியா?

நான் சொல்றது சரி தானே மித்தி?" – இந்து கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதைக் கேட்கும்போதே செவிகளில் பாகுக் கரைசலைக் கரைத்து விட்டாற் போலிருந்தது.

"சரி தான் இந்து!... உங்க ரெண்டுபேத்துக்கும் ஏதாச்சும் ஆபத்து வந்துடுமோன்னுதான்... நான் ரொம்பப் பயப்படறேன்."

"எப்பவும் நாம்ப நெகட்டிவா 'திங்க்' பண்ணவே கூடாது மித்தி! 'நல்லதே நடக்கும்'னு பாஸிட்டிவ்வா 'திங்க்' பண்ணு... பயந்துகிட்டே இருந்தா... எதையுமே நாம்ப சாதிக்க முடியாது. போல்டா இருக்கணும்.

நீ ஒரு ரிப்போர்ட்டர்! நீ ரொம்ப துணிச்சலான பொண்ணுன்னு சிவா சொல்றாரே? நீ எங்களுக்கு தைரியம் சொல்லி அழைச்சுட்டுப் போறதை விட்டுட்டு... இப்படி பயந்தா எப்படி மித்தி?" – உரிமையாய் அதட்டினாள் இந்து.

"அப்படிச் சொல்லு இந்து! என்ன மித்தி இது? எங்களைப் பத்தின கவலையை விட்டுட்டு... அங்கே போய் இறங்கினதும் என்ன செய்யப் போறோம்கிறதைப் பத்தி பிளான் பண்ணு! இந்து சொன்ன மாதிரி நல்லதை மட்டும் நினை...

'மனம் போல வாழ்வு'ன்னு பெரியவங்க சும்மாவா சொல்லி வச்சாங்க? துணிவே துணைன்னு பகவான் மேல பாரத்தைப் போட்டுட்டு கிளம்புவோம்.

நீ சிரிச்ச முகத்தோட வீட்டுக்குப் போயி ரெடியா இரு... நாங்க வந்துடறோம்.

பயம் தெளியறதுக்கு ஏதாவது ஸ்லோகம் இருந்தா... அதை சொல்லிட்டே இரேன்_ நீ தான் ஒவ்வொண்ணுக்கும் மந்திரம் சொல்வியே?"

"சரி... எல்லாம் அவன் செயல்! நான் கிளம்பறேன்.... என்ன சிவா? சந்துடிசாக்குல என்னைக் கிண்டல் பண்றியா? என்னை எப்படிவேணாலும் கேலி பண்ணிக்கோ... ஐ டோன்ட் கேர்... பட்! மந்திரத்தை மட்டமா நினைக்காதே! மந்திரத்துக்கு தனி சக்தி உண்டு தெரியுமா? மனசுல ஒண்ணை நினைச்சு... அதற்குரிய மந்திரத்தை உச்சாடனம் பண்ணினா... காரிய சித்தி உண்டாகும். தெரியுமா?"

"அம்மாடி! நான் ஒண்ணும் கேலி பண்ணலை... மந்திரத்தோட மகிமை என்னன்னு எனக்கும் தெரியும்.

காரிய சித்தி கிடைக்கணும்னு இப்பத்துலே இருந்து மந்திர ஜபம் பண்ணு! சரியா_? வர வர எதுக்கெடுத்தாலும் சந்தேகக் கண்ணோட்டத்துல பார்க்க ஆரம்பிச்சுட்டே நீ!"

"நான் எப்பவும் போலத்தான் இருக்கேன். சிவா! நீ தான் ரொம்பவே மாறிட்டே. சந்தேகம் ஏற்படும் படியாவே ஒரு தினுசா நடந்துக்கிறே... தெரியுமா?"



"யார் நானா? சரி தான்... இந்த மேட்டரை கேள்விப்பட்டதிலிருந்து நீ நார்மலாவே இல்ல மித்தி!

ஏற்கனவே நீ டென்ஷனா இருக்கே... இதுல நான் உள்ளதைச் சொல்லி... இன்னும் அதிகப்படுத்த வேணாம்னு நெனக்கிறேன். முதல்லே கிளம்பறதுக்கு வழியைப் பார்ப்போம். நம்ம சண்டையை சாவகாசமா வச்சுக்கலாம். இறங்கு!"

புள்ளிமானாய் தாவி இறங்கிய மிதிலாவைத் தொடர்ந்து சென்ற இந்துவை... வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி இறங்கினான் சிவா.




இயற்கை எழில் கொஞ்சும் சுருளி மலை!

வானளாவ வளர்ந்த அடர்ந்த மரங்களில் பறவைகளின் கலகலத் த்வனி.

சிலுசிலுவென்ற மந்தமாருதம்... அவர்களை உரிமையாய் தொட்டுத் தழுவியது.

மினி பஸ்... சுருளிமலையில் ஒரு சின்ன மைதானம் போல் உள்ள இடத்தில் ஆசுவாசப்பட்டு நின்று கொண்டு... அவர்களை உதிர்த்தது.

ட்ராவல் பேக்கை தோளில் மாட்டியபடி மூவரும் மெல்ல நடந்தார்கள்.

இந்து இந்த உலகையே மறந்து இயற்கை அழகில் லயித்து விட்டிருந்தாள்.

பாலத்தின் அடியில் சலசலத்து ஓடிய ஆற்றில் நாரைகளும் கொக்குகளும் சிறகுகளை சடசடத்தபடி மும்முரமாய் மீன்களைத் தேடித் துழாவின.

'கூ.... குக்கூ.... கூ' என்று எங்கிருந்தோ குயில்கள் இன்னிசை கீதம் பாடின.

பாக்கு மரத்திலிருந்து ஏழெட்டு பஞ்சவர்ணக் கிளிகள் சொல்லி வைத்தாற் போல் குபீரென்று பறந்தோடின.

"மித்தி! நீயும் இந்துவும் மெல்ல நேரா நடந்து போயிட்டு இருங்க...

அதோ அந்த டீக்கடையில சாப்பிடறதுக்கு ஏதாச்சும் வாங்கிட்டு வர்றேன்."

சிவா சுட்டிக்காட்டிய டீக்கடையில் நான்கைந்து பேர் டீ குடித்துக் கொண்டிருந்தார்கள்.

குளிருக்கு இதமாய் தலையில் மப்ளர் கட்டிக் கொண்டபடி இரண்டு பேர் பெஞ்சில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தனர்.

டீக்கடையில், மிகப் பெரிய இட்லிப் பானையை அடுப்பில் ஏற்றி இருந்தனர்.

கணவனும், மனைவியுமாய் கடை நடத்துகிறார்கள் போலும்! கணவன் டீயை ஆற்ற... மனைவி வேறொரு சின்ன ஸ்டவ்வில் வடை சுட்டுக் கொண்டிருந்தாள்.

"நாங்களும் கூடவே வர்றோம் சிவா! எப்பவுமே சேர்ந்து போறது தான் நல்லது" என்றாள் மிதிலா. மூவரும் டீக்கடையை நெருங்கினார்கள்.

"எங்களுக்கு பிரஷ் பண்ணாம காபி, டீ சாப்பிட்டுப் பழக்கமில்ல... நீ டீ குடிக்கிறியா இந்து?"

"ஊகூம்... வேணாம் அத்தான்! எனக்கும் அந்தப் பழக்கம் இல்ல." இந்துவை ஆச்சரியமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு "நாலு, நாலு இட்லியா வச்சு மூணு பார்சல் கட்டுங்க... உளுந்த வடை மூணு... சட்னி வச்சுக் கட்டிக் குடுத்துடுங்க," என்றான் சிவா.

"அருவிக்குப் போகணும்னா... ரொம்ப தூரம் நடக்கணுமா ஐயா?"

டீ குடித்துக் கொண்டிருந்த பெரியவரிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தாள் மிதிலா.

"இப்படி நேரா ஏத்தமா போற ரோட்டுல பத்து நிமிஷம் நடந்தா... சுருளி அருவிக்குப் போயிரலாம்."

"குளிச்சுட்டு வந்து பூத நாராயணரை தரிசிக்கணும். அந்தக் கோவில் எங்கே இருக்கு?"

"அருவியில் குளிச்சிட்டு... வந்த வழியே திரும்பணும். அஞ்சு நிமிஷ நடையில... இடது பக்கமா திரும்பிப் பார்த்தாக்க... சரிவுலே ஒரு பாதை பிரியும். இறங்கி நடந்தா கோவில் கிட்டக்கத்தான்..." என்றபடி மூவரையும் ஆர்வமாய் ஊன்றிப் பார்த்தார் பெரியவர்.

"நீங்க வெளியூர்லே இருந்து வர்றீங்களா? ஜாலியா அருவியில குளிச்சுட்டு... கோவிலுக்குப் போயிட்டு போகலாம்னு வந்தீங்களாக்கும்?"

"நாங்க சென்னையில இருந்து வர்றோம்... நாங்க வந்தது வேற விஷயத்துக்காக...! இதோ... இவங்க செடி கொடிகளை ஆராய்ச்சி பண்ண வந்திருக்காங்க"

"ஓ... படிக்கிற பசங்கன்னு சொல்லுங்க!"



"ஐயா... ஒரு சந்தேகம்! சுருளி அருவியில விழற தண்ணியைத் தான் 'சுருளித் தீர்த்தம்'னு சொல்றாங்களா?"

"சேச்சே... அது வேற... இது வேற தாயீ... நீங்க அருவியில குளிச்சுட்டு வந்து... முதல்லே பூத நாராயணரை கும்பிட்டுக்கோங்க... கோவிலை விட்டு வெளியே வந்து நேரா நடந்தாக்க... அருவியில இருந்து கொட்டற தண்ணி... ஆறா ஓடி வரும். சின்ன ஆறு தான்!

ஆத்தைக் கடந்து நேரா போனாக்க... மலைப்பாதை போகும். மூணு கி.மீ., தூரத்துக்கு மேலே ஏறணும் தாயீ... ஒத்தையடிப் பாதை தான்... ஆர்வக் கோளாறுலே வலது பக்கம் எட்டிப் பாத்துராதீங்க... பெரிய கெவி... அதல பாதாளம் தான்!

இடது பக்கமா சில கிளைப் பாதை பிரியும்... நேரா போனீங்கன்னா... சுருளியாண்டவர் குகை தான்! குகை மேலே இருந்து தீர்த்தம் கொட்டுது தாயீ... இதைத் தான் சுருளித் தீர்த்தம்னு சொல்றோம். தீர்த்தம் ரொம்ப பிரசித்தம் தாயீ...

மூலிகைத் தண்ணி கலந்த தீர்த்தம்... தீராத வியாதி தீரும். நீங்க அவசியம் அதைப் பார்க்கணும்... மறக்காம ஒரு பாட்டில்லே தீர்த்தத்தைப் புடிச்சுட்டுப் போய் வீட்டுலே குடுங்க... அது அரு மருந்து தாயீ..."

"நீங்க சொல்றபடியே செய்றோம் ஐயா! சுருளி ஆண்டவர் சன்னதியிலே இருந்து நாகம்மா குகைக்குப் போகணும்னா... ரொம்ப தூரம் மலைப் பாதையில ஏறணுமா?"

சென்னை வாசிகள்... அதுவும் இந்தக் காலத்து இளையவர்கள் நம்மை மதித்து விசாரிக்கிறார்கள்' என்ற பெருமிதத்தில் மிதந்து கொண்டிருந்த பெரியவருக்கு சட்டென்று முகம் இருண்டு போனது.

"நா... நாகம்மா குகையா? அதைப் பத்தி ஏன் தாயி விசாரிக்கிறீங்க?"

"நாங்க நாகம்மா கிட்ட அருள் வாக்கு கேட்டுட்டுப் போகலாம்னு வந்தோம்... அவங்க கிட்ட குறி கேட்கிறதுக்காக ஏகப்பட்ட ஜனங்க திரண்டு வர்றாங்களாமே?"

"இந்த சங்கதி பட்டணம் வரைக்கும் பரவிப் போச்சாக்கும்? ஆனா, சில நாட்களா நாகம்மா குறி எதுவும் சொல்றதில்லை தாயீ... வர்ற சனங்க ஏமாத்தமா திரும்பிப் போறாக... அதனால நீங்க அங்கன போகாதீங்க தாயீ... ஆபத்து வரும்."

"நாங்க அந்தம்மாவை கும்பிடத்தானே வந்திருக்கோம். அவங்க

எங்களுக்கு அருள்வாக்கு சொல்லாட்டியும் பரவாயில்லை... ஜஸ்ட்... அவங்களைப் பார்த்து 'விஷ்' பண்ணிட்டு... வந்த வழியே திரும்பிடறோம்"

"எதுக்குத் தாயீ வம்பு? அந்தம்மா இப்போ யாரையும் தன்னைப் பார்க்க அனுமதிக்கிறதில்ல...

ஏன்னு தெரியலை... மீறி 'நாகம்மாவைப் பார்த்தே தீரணும்'கிற ஆர்வத்துல குகைக்குள்ளார எட்டிப் பார்த்தவங்களோட கதி என்னாச்சு தெரியுமா? கையும் காலும் விளங்காம முடங்கி ஊனமா கிடக்கிறாங்க தெரியுமா?"

'காவ்யாவின் சித்தி கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையாக இருக்கும் போலிருக்கிறதே?"

மதிலாவுக்கு உள்ளூர திகில் ஊறியது.

"நிஜமாத்தான் சொல்றீங்களா ஐயா? நீங்க அவங்களை நேர்ல பார்த்திருக்கீங்களா? அப்படி ஊனமானவங்களை நாங்க பார்க்க முடியுமா?" திடீரென்று குறுக்கிட்டு கேள்விக் கணைகளைத் தொடுத்தான் சிவா.

"நாங்க இந்த மண்ணுல பொறந்தவங்க தம்பி. மண்ணை தெய்வமா கும்பிடறவங்க தம்பி. எங்களுக்கு பொய் சொல்லத் தெரியாது.

நாஞ்சொல்றது அத்தனையும் நிசம் தம்பி! அவங்களை நான் மட்டுமா... ஊரே பார்த்து அரண்டு போய் கிடக்குது. இப்பக் கூட நீங்க 'சுயம்பு நாக பைரவி' கோவிலுக்குப் போனீங்கன்னா... அவங்களைப் பார்க்கலாம். அவங்க அங்கன தானே முடங்கிக் கிடக்கிறாங்க."

"சரி... அந்தக் கோவிலுக்கு எப்படிப் போகணும்?"

"எதுக்கு தம்பி வம்பு? ரெண்டு வயசுப்பொண்ணுங்க வேற கூட வந்துருக்குதுங்க...

வீணா ஆபத்துல மாட்டிக்காதீங்க தம்பி"

"அந்தக் கோவிலுக்குப் போகக் கூடாதா ஐயா? அதுக்கும் தடை உத்தரவு போட்டுட்டாங்களா என்ன?'

"அட... அப்படியில்ல... வெள்ளி, செவ்வாய்னா நல்ல கூட்டம் வரும். வெளியூர்லே இருந்தெல்லாம் நெறைய பக்தர்கள் வருவாங்க... மத்த நாள்லே கோவில் மூடிக் கிடக்கும். பெரிய ஆல விருட்சத்துக்கு அடியில சின்னதா ஒரு கற்கோவில். அவ்ளோ தான்"

"இன்னிக்கு வியாழக்கிழமை. நாளைக்குத் தான் பௌர்மணி! ரெண்டு



நாள் இங்கேயே, தங்கணும்.

நாம்ப தங்கறதுக்கு இடம் வேணுமே சிவா?" சிவாவுக்கு மட்டும் கேட்கும்படி... குரலைத் தழைத்துக் கொண்டு கவலை தொனித்த குரலில் பேசினாள் மிதிலா.

"பொறுமையா நிறைய தகவல்கள் சொன்னீங்க ஐயா! ரொம்ப நன்றி! இவங்களோட செடி, கொடி ஆராய்ச்சிக்காக ரெண்டு நாள் தங்க வேண்டியிருக்கு. தங்கறதுக்கு ஏதாச்சும் இடம் கிடைக்குமா? இல்ல... நாங்க கம்பத்துக்கு போய்தான் ரூம் போடணுமா?

"பூத நாராயணர் கோவிலுக்குப் பக்கமா ஒரு மடம் இருக்கு. சுருளி ஆண்டவர் கோவில் பூசாரி வந்து தங்குவாரு... சில சமயம் அவர் கீழே வராம மலை உச்சியில குகைக் கோவில் வாசல்லே கூட... துண்டை விரிச்சுப் படுத்துப்பாரு... இந்த ஒரு இடம் தானிருக்கு. வேணும்னா பூசாரி கிட்டே விசயத்தை சொல்லிக் கேட்டுப் பாருங்க...

எனக்கென்னமோ நீங்க பேசாம கம்பத்துல ரூம் போட்டு தங்கிட்டு வர்றது தான்... நல்லதுன்னு படுது தம்பி. வயசுப் பொண்ணுங்க வேற இருக்காங்கல்ல? அவங்க மடத்துல தங்கினா... அவ்ளோ பாதுகாப்பா இருக்காது தம்பி"

"அதெல்லாம் பாதுகாப்பா எச்சரிக்கையா இருந்துக்க வேண்டியதுதான். எங்க ஆராய்ச்சிக்கு மடத்துல தங்கினாத்தான் தோதுப்படும்

சரிங்க ஐயா! ரொம்ப நன்றி... நாங்க வரோம்" பெரியவரைப் பார்த்து கை கூப்பினாள் மிதிலா.

பீதி படர்ந்த முகத்துடன் லேசாக வாயைப் பிளந்தபடி அந்த மூவரையும் பார்த்துக் கொண்டிருந்தார். பெரியவர்.

டீக்கடை வாசலில் இருந்தவர்களும்.. அதிர்ச்சியுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

விதி சிரித்தது!

அந்த மூவரையும் மரண வாசலில் தள்ளி விட... தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.




வெள்ளியை . உருக்கி வார்த்தாற்போல் பாலாய் அருவி கொட்டிக் கொண்டிருந்தது.

"மித்தி! பச்சைப் பசேல்னு மரங்கள்... அழகான அருவி ....சுருளி மலை மனசைக் கொக்கி போட்டு இழுக்குதுல்ல?"

திளைக்க திளைக்க அருவியில் நனைந்து கொண்டே கேட்டாள் இந்து.

"ஆமா இந்து! இது அழகான மலை மட்டுமில்ல.. சித்தர்கள் வாழும் புண்ணிய வனப் பகுதியாச்சே! இந்த மண்ணுல இறங்கி ஆராய்ச்சி பண்றதுக்கு நாம்ப குடுத்து வச்சிருக்கணும்.

ஆசை தீரக் குளிச்சாச்சு... வா இந்து! அதோ அங்க... பெண்கள் உடை மாத்தறதுக்கு ஒரு ரூம் இருக்கு பாரு... அங்க டிரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடலாம்."

நனைந்த உடையை மாற்றி விட்டு விரித்த கூந்தலுடன் பேக்கை மாட்டிக் கொண்டு வந்தவர்களை இடை மறித்தான் சிவா.

"இந்தப் படிக்கட்டுலே அப்படியே ஓரமா உட்காருங்க... அருவியில குளிச்சதிலே பசி வயித்தைக் கிள்ளுது. இட்லி சாப்பிட்டுட்டு போகலாம்."

இளம் பெண்களுக்கும் நல்ல பசி! மறுக்காமல் சாப்பிடத் தொடங்கினர்.

சாப்பிட்டு முடித்ததும் வேகமாய் நடந்தனர். மூவருக்குமே ஆர்வமும் படபடப்பும் அதிகரித்துக் கொண்டே போயின.

'பூத நாராயணர் ஆலயம்!' பூத நாராயணர் நின்ற கோலத்தில் காட்சியளித்தார். பெருமாள் சாந்த மூர்த்தி! ஆனால் பூத நாராயணரோ உக்கிரம் கலந்த கண்களுடனும் முகத்தில் முறுக்கிய மீசையுடனும் காட்சி தந்ததற்கும் ஒரு காரணம் சொன்னார் கோவில் குருக்கள்.

"முப்பத்து முக்கோடி தேவர்களும் சேர்ந்து சபை கூடிப் பேசிய இடம் சுருளி மலை.

தேவர்கள் அசுரர்களோட தொந்தரவிலிருந்து தப்பிக்க இங்கே கூடி யாகம் நடத்தினாங்க...

அந்த யாகம் எந்த விதத் தடங்கலும் இல்லாம நடக்கணும்னு ...இந்த



ஸ்தலத்துல மகா விஷ்ணு உக்கிர மூர்த்தியா – பூத நாராயணரா தோன்றி காவல் காத்தாராம்.

அதனால தான் மூலவருக்கு உக்கிரமான தோற்றம் ஏற்பட்டுச்சு... அதனால் இத்தலத்துல வித்தியாசமா விபூதி பிரசாதம் வழங்கப்படுது."

சுடர் விளக்கு வெளிச்சத்தில் காட்சி தந்த பூதநாராயணரை மனம் உருக வேண்டிக் கொண்டாள் மிதிலா.

"ஐயனே! அசுரர்கள் கிட்டே இருந்து வேள்வியைக் காத்த மாதிரி... எங்க காரியத்திலும் துணையா இருக்கணும் எம்பெருமானே! நினைத்த காரியம் ஈடேறணும், உன் பரிபூரண அருள் எங்களுக்கு வேண்டும் ஐயனே!"

மனமுருக கண்களில் கண்ணீர் மல்க வேண்டிக்கொண்டாள்

விபூதியை பய பக்தியுடன் நெற்றியில் இட்டுக் கொண்டு மூவரும் ஆற்றைக் கடந்து மலைப் பாதையில் ஏறினார்கள்.

ஐந்து நிமிடம் நடந்திருப்பார்கள்.

கூட்டம் கூட்டமாக குரங்குகள் இவர்களை நோக்கி மரக்கிளைகளிலிருந்து குதித்தன.

"மித்தி! நம்ம கிட்டே தின்பண்டம் எதையோ எதிர் பார்த்து குரங்குங்க குதிக்க ஆரம்பிக்குது. –பேக்கை பிடுங்கினாலும் பிடுங்கிடும். இப்படி வா... இதோ இந்தக் கொம்பை ஒடிச்சு விரட்டறேன்."

"எங்களுக்கும் ஆளுக்கொரு சின்னக் கொம்பை குடுத்துடு சிவா!"

மூவரும் கொம்புகளைப் பாதையில் தட்டி குரங்குகளை விரட்டியபடி நடந்தனர்.

ஒரு கிலோ மீட்டரைக் கடந்ததும்... சொல்லி வைத்தாற்போல் குரங்குகள் மாயமாயின.

ஒற்றையடிப் பாதையில் நடப்பதே படு சிரமமாய் இருந்தது. குண்டும் குழியுமாகவும்' பெரிய மேடு பள்ளமாகவும் பாதை தொடர்ந்தது.

வலது பக்கம் தற்செயலாகப் பார்த்தாலே... தலை கிறுகிறுத்தது.

திடீரென்று சுழற்காற்று சுழன்றடித்தபோது... மூவருக்கும் தூக்கி வாரிப் போட்டது.

காற்று தெற்கு நோக்கி அவர்களைத் தள்ளப் பார்த்தது. தெற்கில்... அதல பாதாளம்!

காற்று புழுதியை வாரி வீசியதில்... மூவருமே கண்ணைக் கசக்கியபடி பீதியில் உறைந்தனர்.

சிவா சமயோசிதமாக பெண்கள் இருவரையும் கெட்டியாகப் பிடித்து இழுத்து... இடது புறமாக இருந்த ஆலமரத்தருகே நிறுத்தினான்.

"பயமா இருந்தா ஆலம்விழுதை கெட்டியா பிடிச்சுக்கோங்க. கொஞ்சம் அசந்தோம்னா காத்து ஆளையே தூக்கிட்டுப் போயி... பாதாளத்துல தள்ளிடும் போலிருக்கே?"

பத்தே நிமிடங்களில் வாயு பகவான் சாந்தமடைந்து விட... மேற்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தனர்.

பாதையோரத்தில் இருந்த சிறு செடிகளின் இலைகளைப் பறித்துக் கொண்டு சுவாரசியமாய் அதைப் பற்றி ஏதேதோ பேசிக்கொண்டு வந்தனர் இந்துவும் சிவாவும்!

மிதிலா பின்னால் திரும்பி இருவரையும் பார்த்துவிட்டு சற்று நடையைத் துரிதமாக்கினாள்.

'நீல விழிகள்... அதுவும் நாகம்மா பெயரில் நீல விழிகளுடன் தொடர்ந்து ஒரு சக்தி வாய்ந்த பெண் தோன்றும் அதிசயம்...

நாக பைரவி கோவில்... பைரவி குகை... போன்றவற்றைப் பற்றியே சதா எண்ணி... அவளது மனம் அலை பாய்ந்தது.

'இந்த அதிசயம் ஏன் நடக்கிறது? எப்படி நடக்கிறது? எதற்காக...?' கேள்விப் பந்துகளைத் தட்டியபடியே நடந்தவள்... தற்செயலாய் பக்கவாட்டில் வலது பக்கமாய் திரும்பினாள்.

அந்தப் பெரும் பள்ளத்தாக்கிலிருந்து... காவி உடையில் ஜடாமுடியுடன் இருந்த ஒரு வயதான சாமியார் தலை குனிந்தபடி நடந்து வந்தார். கையில் சிறு கமண்டலம்!

காற்றில் மிதந்து நடப்பது போல் பெரும் பள்ளத்தாக்கை ....அந்தரத்தில் குறுக்கே கடந்து வந்து.... இந்த மலைப் பாதையில் பாதம் பதித்து நடக்க ஆரம்பித்தார்.

மிதிலாவுக்கு நான்கடி தூரத்தில்... அந்த சாமியார் முன்னே நடந்தார்.

"மைகாட்! இது கனவா? நனவா? கண்முன்னே ஒரு மாபெரும் அதிசயம் நிகழ்ந்து விட்டது.

பள்ளத்தாக்கை எட்டிப் பார்த்தாலே... தலை சுற்றுகிறதே? இந்தத் துறவி அதில் அந்தரத்தில் மிதந்து நடந்து வந்தாரே?

இவர் சாதாரண துறவி அல்ல... சித்தர் தான்! ஆஹா... எனக்கு சித்த தரிசனம் கிடைத்து விட்டதா?" ஆச்சரியத்தில் அவளது கை கால்கள்



உறைந்தாற் போலிருந்தது.

பின்னால் திரும்பிப் பார்த்தாள். இந்துவும் சிவாவும் ஏதோ ஒரு மரக்கிளையைப் பிடித்து... இலைகளைக் கூர்ந்து கவனித்தபடி இருந்தார்கள்.

சத்தமிட்டு அவர்களை அழைத்து இந்த அதிசயத்தைக் காட்டுவதற்கு அவளது நா எழும்பவில்லை.

மீண்டும் அந்தத் துறவியைப் பார்த்தாள். நல்ல சந்தர்ப்பம்! கை நழுவ விடவே கூடாது.

"ஸ்வாமி! ஸ்வாமி! எனக்கு உங்க ஆசீர்வாதம் வேணும்... கொஞ்சம் நில்லுங்க ஸ்வாமி" அவள் குரல் கொடுத்ததும் அந்தத் துறவி சட்டென்று நின்றார்.

அவரது முகம் தெரியவில்லை. முதுகு காட்டி நின்றவரை நெருங்கினாள். அவரது பாதம் பட்ட மண்ணைத் தொட்டு வணங்கினாள். அவளது மேனி புல்லரித்தது.

"வந்த அன்னிக்கே உங்க தரிசனம் கிடைச்சதுக்கு நா கொடுத்து வச்சிருக்கணும். என் மனசில இருக்கிற கேள்விகளுக்கு விடை தெரியணும் ஸ்வாமிஜி!"

"நீல விழிகளோட தொடர்ந்து ஒரு சக்தி வாய்ந்த பெண்மணி தோன்றும் அதிசயத்தை ஆராயணுமா? நீல விழிகளைப் பார்க்கணுமா? சூட்சுமத்தத் தெரிஞ்சுக்கணுமா? நாகம்மா உன் கிட்டயே இருக்கா... கையில் வெண்ணெயை வச்சுக்கிட்டு நெய்க்கு அலையறியே மிதிலா?" கூறிய படி மந்தகாசமாய் சிரித்தபடி திரும்பி அவளைப் பார்த்தார்.

சாந்தமும் கருணையும் ததும்பும் முகம் தான்! பார்வையை தழைத்திருந்தவர் திடீரென்று அவளது விழிகளை நேருக்கு நேர் பார்க்கவும்... மிதிலாவுக்கு தூக்கி வாரிப் போட்டது.

அவருக்கும் நீல விழிகள்...! கடகடவென்று அவர் நகைத்ததும் ...மிதிலா அதிர்ந்து தடுமாறினாள்.

கவனக்குறைவாய் சிறு குழிக்குள் காலைப் பதித்து நிலை தடுமாறி சரிந்து விழுந்தாள். 'ஐயோ... அம்மா!' அதிர்ச்சியின் உச்சக் கட்டத்தில் அலறி விட்டாள்.

கீழே விழுந்தவள் மறுகணம் நிமிர்ந்து ஏறிட்டபோது சித்தரைக் காணவில்லை.




முழங்கையில் லேசான சிராய்ப்பு காயத்துடன் அவள் தள்ளாடி எழுந்து கொண்டபோது... தபதபவென்று ஓடி வந்தாள் இந்து.

சிவாவும் பதறியபடி அவளது கையில் படிந்த மண்ணைத் தட்டி விட்டான்.

"என்ன மித்தி? பாத்து நடந்திருக்கக்கூடாது?"

"இந்து! அந்த சித்தரைப் பார்த்தியா? சிவா... இந்தப் பள்ளத்தாக்குல இருந்து அந்தரத்துல நடந்து... இதோ...இங்க இப்ப நடந்த அதிசயத்தை நீ பார்த்தே இல்ல?

வந்த அன்னிக்கே நமக்கு சித்த மகா புருஷரோட தரிசனம் கிடைச்சிருக்கு பார்த்தியா? நாம்ப ரொம்பவே புண்ணியம் பண்ணியிருக்கணும். இல்லையா சிவா?"

"எ...என்ன சொல்றே மித்தி? எங்க கண்ணுக்கு எதுவும் தெரியலையே? அலறியடிச்சுட்டு திடீர்னு விழுந்துட்டே... நீ விழுந்ததைப் பார்த்துட்டு பதறியடிச்சு ஓடி வர்றோம். அதுக்கு முன்னாலே... யாரும் தென்படலையே?"

"ஆமா... நாங்க எந்த சித்தரையும் பார்க்கலையே? அந்தரத்துல நடந்து வந்தாரா?" கலவரம் படிந்த முகத்துடன் இந்து. சிவாவை ஏறிட்டாள்.

"வந்தவர் சித்தரே தான்! நாம வந்ததன் நோக்கம் என்னன்னு கரெக்டா சொல்றாரே? என் பேரைக் கூட சொன்னாரு தெரியுமா?

'நாகம்மா உன் கிட்டயே இருக்கா... கையில் வெண்ணெயை வச்சுக்கிட்டு நெய்க்கு அலையறியே மிதிலா'ன்னு கேட்டுட்டு கடகடன்னு சிரிச்சுட்டு என்னை உத்துப் பாத்தாரு

அ- அவருக்கும் பெரிய நீல விழிகள் தான்! உடம்பெல்லாம் ஜிவ்வுன்னு அப்படியே புல்லரிச்சுப் போச்சு. கை கால் பதறி தடுமாறி விழுந்துட்டேன். உங்க கண்ணுக்கு எதுவும் தென்படலையா?

மைகாட்! எனக்கு மட்டும் ஸ்பெஷலா தரிசனம் கிடைச்சிருக்கே? நான் ரொம்பவே கொடுத்து வச்சிருக்கணும். அந்த சித்தர் சொன்னதுக்கு என்ன அர்த்தம் சிவா? நாகம்மா நம்ம கிட்டயே இருக்காள்னு... சொன்னாரே? ஒரு வேளை சூட்சும ரூபத்துல நம்ம கண்ணுக்குத் தெரியாம... நம்ம



கூடவே 'நாகம்மா' இருக்காங்களோ? எனக்கு நம்பிக்கை இருக்கு சிவா! இது சித்தர் பூமி! எனக்கு மட்டுமே தரிசனம் தந்து மறைஞ்ச சித்தர்... கண்டிப்பா சூட்சும ரூபத்துல நம்ம கிட்ட தான் இருப்பாரு.

அதே மாதிரி நாகம்மாவும் சூட்சும ரூபத்துல நம்ம கூட இருக்காங்க... அவங்க கிட்ட மனசு உருக வேண்டிக்கலாம். அவங்க தரிசனம் கிடைக்கணும்னு பிரார்த்தனை செஞ்சுக்கலாம்" என்ற மிதிலா அவர்களது பதிலுக்குக் காத்திராமல் கை கூப்பி கண்களை மூடி தியானித்தாள்.

"இவளுக்கு நிஜமாவே சித்தரோட தரிசனம் கிடைச்சுதா? இல்ல...இந்த மேட்டர்லே ரொம்ப இன்வால்வ்மெண்ட்டோட இவ இறங்கியிருக்கா... அதனால ஒருவேளை மனப்பிரமை ஏற்பட்டிருக்குமோ?" சிவா இந்துவுக்கு மட்டும் கேட்கும்படி மெல்ல முணுமுணுத்தான்.

"மித்தி சொல்றது நிஜமா இருக்காதுன்னு ஃபீல் பண்றீங்களா அத்தான்?

"நோ... நோ! மித்தி என்னிக்கும் பொய் பேச மாட்டா...

அவ அதீத ஆர்வத்துல இருக்காள்லே? ஒரு வேளை இது அவளோட மனப் பிரமையா கூட இருக்கலாமோன்னு... ஒரு சின்ன சந்தேகம். அவ்ளோதான்!

இந்து! அறிவுக்கு அப்பாற்பட்ட சக்தின்னு ஒண்ணு இருக்கே? ஒரு வேளை... நிஜமாவே இந்த 'மிராக்கிள்' நடந்திருக்கவும் வாய்ப்பிருக்கு' பொறுத்திருந்து தான் பார்ப்போமே"

மிதிலாவின் முகத்தில் புதிய தெம்பு ஜனித்திருந்தது.

சித்தரை தரிசித்து விட்டோம் என்ற மகிழ்ச்சியினாலோ... சித்தர் தரிசனத்தின் மகிமையினாலோ... உற்சாகமும் உத்வேகமும் பன்மடங்காகப் பெருகி விட்டிருந்தது.

அவளுக்குள் இருந்த பயம் பறந்தோடிப் போய்...அசாத்திய துணிச்சல் பிறந்திருந்தது.

நடையைத் துரிதப்படுத்தினார்கள்.

**சு**ருளி ஆண்டவர் சன்னதி!

சுமார் ஒரு அடி அளவுள்ள சிறிய மூலவர்தான் என்றாலும்... சாந்நித்யம் மிகுந்திருந்தது.

மூலவருக்குப் பின்னால் கறுப்பாக–கரடுமுரடாக– கொஞ்சம் பின்னிப் பிணைந்து சுவர் காணப்பட்டதை உற்றுப் பார்த்தாள் மிதிலா.

"மேலே இருந்து சுருளித் தீர்த்தம் சதா விழுந்துட்டே இருக்கும் **தாயீ!** மூலிகைத் தீர்த்தம் பட்டு பட்டு இந்த மரவேர்களும் இலைகளும் கல்லாய் இறுகிப் போச்சுங்க.

இது முழுக்க மரவேர்கள் தான்! தட்டிக் காட்டறேன். டொக் டொக்குனு சத்தம் வருது பாருங்க... இங்கே இருந்து விழற தண்ணி அப்படியே அங்கே கீழே வழிஞ்சு தொட்டியில தேங்குது பாருங்க...

வருஷக் கணக்கா ஆனாலும் அந்தப் பாதையில பாசியோ வழுக்கலோ ஏற்படறதில்லை. தீராத நோய் தீர்க்கிற அருமருந்து இது." பூசாரி சொன்னார்.

அங்கும் கண்களை மூடி மூவரும் தியானித்து விட்டு தீர்த்தத்தைப் பிடித்து தலையில் தெளித்துக் கொண்டனர்.

காலியாய் கிடந்த வாட்டர் பாட்டில்களில் தீர்த்தத்தைப் பிடித்துக் கொண்டனர்.

மூலிகைத் தண்ணீர் வழிந்து ஓடிவரும் வழியாக ஆராய்ந்ததில் ஒரு அதிசயம்..

சிறு சிறு கற்களில் இலைகளின் படிமாணங்கள்!

தீர்த்தம் பட்டுபட்டு இலைகள் கல்லாய் சமைந்து விட்டன. இலைகளின் ரேகைகள் கூட தெள்ளத் தெளிவாய் பளிச்சென்று இருந்ததைத் தடவித் தடவிப் பார்த்தாள் இந்து.

மிதிலா யோசனையுடன் மீண்டும் பூசாரியை நெருங்கினாள். "ஐயா! நாங்க சென்னையிலிருந்து வந்திருக்கோம். செடி–கொடி ஆராய்ச்சிக்காக இங்க தங்க வேண்டியிருக்கு.கீழே ஒரு பெரியவர் கிட்டே விசாரிச்சோம்.

நீங்க மனசு வச்சா... கீழே மடத்துல தங்க அனுமதிப்பீங்கன்னு சொன்னாங்க..

உங்களை நம்பித்தான் இவ்ளோ தூரம் வந்திருக்கோம் ஐயா!"

கெஞ்சும் தொனியில் பேசிய மிதிலாவை ஏற இறங்கப் பார்த்தார் பூசாரி. அவரது பார்வை ஒரு கணம் தொட்டியில் விழும் தீர்த்தத்தை ஆராய்ந்து கொண்டிருந்த இந்துவின் மீது படிந்து மீண்டது.

"சரிம்மா... தாராளமா தங்கிக்கோங்க... ஆனா ஜாக்கிரதையா இருங்க... ஆமா.. என்னம்மா இது கையில காயம்? கீழே எங்கனாச்சும் விழுந்தீங்களா தாயீ?"

"வர்ற வழியிலே விழுந்துட்டேன்."

"தீர்த்தத் தொட்டிக்கு வலது பக்கத்துல ஆலமரம் இருக்கு பாருங்க...



அங்க சின்னதா ஒரு குகை வாசல் இருக்கும்.

அதுக்கு எதிர்த்தாப்பல ஒரு வைத்தியரம்மா உட்கார்ந்து இருப்பாங்க... போயி காயத்தைக் காட்டுங்க தாயீ...

பச்சிலை மருந்து ஏதாச்சும் தடவி விடுவாங்க...

சமீப காலமா இவங்களைத் தேடி யார் யாரோ வர ஆரம்பிச்சுட்டாங்க..

கொஞ்ச நேரத்துக்கு முந்திதான்... ஒரு வெளிநாட்டுக்காரன் அந்தம்மா கிட்ட ஏதேதோ விசாரிச்சான்.

கோபம் வந்து திட்டி அனுப்பி விட்டுட்டாங்க... நீங்க எதுவும் பேசாம காயத்துக்கு மருந்து தடவிக்கிட்டுப் போயிட்டே இருங்க. சரியா?"

மிதிலா பலமாய் தலையாட்டினாள். மீண்டும் ஒரு அதிசயம் நிகழ்ப் போவதை அறியாமல் ஆலமரத்தின் அருகிலிருந்த குகை வாசலை நோக்கிப் போனாள் மிதிலா.

பூசாரியின் முகத்தில் ஒரு மாயப் புன்னகை மலர்ந்தது.




**மி**திலாவுக்குள் குழப்பம் பந்தாய் மோதி அலைந்தது. பூசாரியிடம் 'நாகம்மா'வைப் பற்றி விசாரிக்க அவளது நா துடித்துக் கொண்டிருந்தது.

'நாகம்மா – நீல விழிகளைப் பற்றி ஏதாச்சும் விசாரிக்கப் போய்.. பூசாரிக்கு கோபம் வந்து மடத்தில் தங்குவதற்கு இடம் தர மறுத்து விட்டால்...?' என்ற பயத்தில் தொண்டை வரை ஓடி வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு விழுங்கினாள்.

'முழங்கைக்கு மருந்தைத் தடவிக் கொண்டு... நாகம்மா குகைக்குச் செல்லும் வழியைக் கண்டு பிடித்து விட்டு... அப்படியே சுயம்பு நாக பைரவி கோவிலுக்குச் சென்று... கை கால்கள் முடங்கிப் போய் அமர்ந்திருப்பவர்களைப் பார்த்து... இன்றே விசாரித்து விட வேண்டியது தான்!' எண்ணியபடியே அந்த ஆலமரத்தின் அடியில் அமர்ந்திருந்த மூதாட்டியை நெருங்கினாள்.

வட்ட வடிவமான கல்லில் சில இலைகளை வைத்து இழுத்து அரைத்துக்

கொண்டிருந்த மூதாட்டி... தன் அருகில் நிழலாடியதும் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

"என் கையில் காயம் பாட்டிம்மா! தக தகன்னு காந்துது... ஏதாச்சும் மருந்து இருந்தா தடவி விடுங்களேன். ப்ளீஸ்"

தும்பைப் பூவாய் நரைத்த தலைமுடியை கோடாலி முடிச்சிட்டு கொண்டையிட்டு.. நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு வைத்து ..சிவப்பு வண்ணக் கண்டாங்கி சேலையில் கிழவி மங்கலகரமாய் காட்சியளித்தாள். எழுபது வயதிருக்கும்.

"மருந்து தானே? இதோ தடவறேன்" – கூறி விட்டு மேலும் அந்த இலைகளை விழுதாக அரைக்கலானாள்.

"இந்து! இங்க வா... இலைகளை அரைச்சு வச்சு காயத்துக்கு மருந்து போடறாங்க பாரேன்! குட்டி குட்டியா – வித விதமா வேர்களை வேற கட்டாகக் கட்டி வச்சிருக்காங்க... பாரு.

அநேகமாக மூலிகை வேரா இருக்கும் போல தெரியுது" மிதிலா குரல் கொடுத்ததும் சிட்டாய் பறந்து வந்தாள் இந்து. கண்கள் மின்ன... அந்த மூதாட்டி அரைக்கும் விதத்தையும் அவளருகில் இருந்த வேர்களையும் ஆர்வமாய் பார்த்தாள்.

மையாக அரைத்த விழுதைப் பிழிந்து சாறு எடுத்த கிழவி... அந்த சாறை மிதிலாவின் காயத்தில்.. மயிலிறகால் முக்கி எடுத்துத் தடவி விட்டாள்.

"ஏன் பாட்டிம்மா! எனக்கொரு உதவி பண்ண முடியுமா? எனக்கு மூலிகைச் செடிகளைக் காட்டிக் கொடுத்து... என்னோட ஆராய்ச்சிக்கு உதவ முடியுமா?

எதெது மூலிகைன்னே எனக்குத் தெரியாது. எந்த மூலிகை எந்த வியாதி தீர்க்கப் பயன் படுதுன்னு... எனக்கு எடுத்துச் சொல்லி, உதவறீங்களா? ப்ளீஸ்.." இந்து கெஞ்சியபடி சட்டென்று கிழவியின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"மூலிகைங்கிறது இந்தப் புண்ணிய பூமியோட சொத்து! அதை நல்ல விஷயத்துக்காக.. ஜீவ காருண்யத்துக்காக தாராளமா பயன்படுத்திக்கலாம்.

ஆனா கெட்ட எண்ணத்தோட மூலிகைகளைப் பத்தித் தெரிஞ்சுகிட்டு.. அதைக் காசு பண்ணப் பார்த்தா... ஆத்தா சும்மா விட மாட்டா... பச்சிலைகளை வச்சு நான் சின்ன அளவுலே வைத்தியம் பார்க்கிறவள்.

கொஞ்ச நேரத்துக்கு முன்ன... காட்டு இலாகாவை சேர்ந்தவனுக்கு



லஞ்சம் கொடுத்து மயக்கி அவன் கூடவே ஒரு வெள்ளைக்காரன் இங்க வந்தான்...

'மூலிகைங்களை அடையாளம் காட்டி பறிச்சுக் கொடுத்தாக்க... எனக்கு மூட்டை மூட்டையா பணத்தைக் கொட்டித் தர்றேன்'னு சொன்னான்.

நம்ம பொக்கிஷத்தை வெளிநாட்டுக்காரன் கொள்ளையடிக்கப் பார்க்கிறானே?ன்னு எனக்கு கோபம் வந்துடுச்சு.

'விஷயம் தெரியாம வெளயாட வந்துட்டியா பைத்தியக்காரா? உன் உசுரு மேல ஆசை இருந்தா.. இந்த எல்லையை விட்டே திரும்பிப் பார்க்காம ஓடிப் போயிடு'ன்னு திட்டி அனுப்பிச்சுட்டேன்.

'பொறுமையா யோசிச்சு நல்ல பதிலா சொல்லுங்க... ரெண்டு நாள் கழிச்சு வர்றேன்'னு வெட்கமில்லாம சிரிச்சுட்டே சொல்லிட்டுப் போறான் கிறுக்கன்!

மூலிகைங்களைப் பத்தி வெளியில சொல்லக்கூடாது. ஏன்னா... அது சித்த ரகசியம்!

பிராப்தம் இருந்தாத்தான் நாம்ப அதைத் தெரிஞ்சுக்க முடியும். உன்னோட முக விலாசத்தைப் பார்த்தா... உனக்கு அந்தப் பிராப்தம் அமைஞ்சிருக்குன்னு மனசுக்குப் படுது.

காலம் நேரம் கூடி வர்றப்போ.. அதது தானா நடக்கும். இது சித்தர்கள் வாழற வனம்! அவங்க அருள் இல்லாம... நாம்ப ஒரு இலையைக் கூடக் கிள்ளிட முடியாது.

நாக பைரவி ஆத்தா அருளும், சித்தர்களோட அனுக்கிரகமும் இருந்தாத்தான்... நாம்ப எதையும் சாதிக்க முடியும்.

மனசார வேண்டிக்க தாயீ... நல்லதே நடக்கும்" என்றபடி இந்துவின் நீல விழிகளைப் பார்த்தாள் கிழவி.

மந்திர சக்திக்கு கட்டுண்டதைப் போல்... மெய் மறந்து சிலையாய்... கண் இமைகளைக் கூட இமைக்காமல் நின்றிருந்தாள் இந்து.

மிதிலாவுக்கு தர்ம சங்கடமாக இருந்தது. சிவாவும் அவளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மிதிலா துணிவுடன் பேசினாள்.

"ஏன் பாட்டிம்மா... ஒரு சந்தேகம்! இங்கே நாகம்மாங்கிற அம்மாதான் மூலிகை மருந்து கொடுத்து... தீராத வியாதிகளைத் தீர்க்கிறதா சொல்லிக்கிறாங்களே?

அந்த வெளிநாட்டுக்காரன் நியாயமா முதல்லே அவங்களைத்தானே

போய் பார்த்துப் பேசியிருக்கணும்?

நீங்களே சொல்றீங்க... நீங்க சின்ன லெவல்லே வைத்தியம் பார்க்கிறவங்கன்னு? அந்த ஆளு எதுக்கு உங்களை வந்து பார்த்தான்?"

"அப்படிக் கேளு புத்திசாலிப் பொண்ணே! கெட்ட எண்ணம் புடிச்சவனோட கண்ணுக்கு அவ்ளோ சுலபத்துல சிக்குவாளா நாகம்மா?

கொஞ்சநாளாவே இந்த மலையில தீய சக்திகளோட நடமாட்டம் அதிகமாயிடுச்சு.

நாகம்மா யார் கண்லயும் தென் படறதில்லை. நாகம்மாவைப் பார்க்க முடியாம போனதும் தான்... அந்த வெள்ளைக்காரன் என்னைப் பார்க்க வந்தான்."

"ஓ... பாட்டிம்மா! நாங்க நல்ல நோக்கத்தோட தானே வந்திருக்கோம். நாகம்மா சக்தி வாய்ந்தவங்கன்னு எல்லாரும் சொல்றாங்க.

அப்படின்னா எங்களுக்கு எந்த வித தீய எண்ணமும் இல்லைன்னு ... அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே? அவங்களைப் பார்த்துடணும்னு துடிச்சுட்டிருக்கேன். தரிசனம் தருவாங்களா?" ஏக்கத்தோடு கேட்டாள் மிதிலா.

"தரிசனம் தருவாங்களா?'ன்னு கேட்கறியா? ஒருத்தன் ஒரு ஆட்டைத் துக்கி தோள்லே போட்டுக்கிட்டு... ஒரு ஆடு குறையுதேன்னு ஊரெல்லாம் தேடின கதையால்ல இருக்கு?

உனக்கு சூட்சுமம் புரியும் போது... எல்லாமே தன்னால தெளிவாயிடும்... இப்போ கிளம்பிப் போங்க... காயத்துல எரிச்சல் அடங்கிடுச்சுல்ல?"

"அடங்கிடுச்சு பாட்டி." கிழவி பேசியதைக் கேட்டதும்... மிதிலாவுக்கு குழப்பம் கூடுதலானது தான் மிச்சம்!

அதற்கு மேல் கேள்வி கேட்டால் கிழவிக்கு கோபம் எகிறிவிடும் என்ற பயத்தில்... மிதிலா நடையைக் கட்டினாள்.

தீர்த்தம் கொட்டும் தொட்டிக்கருகில் நின்றபடி... பூசாரி இந்துவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"ரொம்ப நன்றி பூசாரி ஐயா! காயத்துக்கு அவங்க மருந்து தடவியிருக்காங்க...

மடத்துல தங்கறதுக்கு அனுமதி கொடுத்ததுக்கு ரொம்ப ரொம்ப நன்றி ஐயா... நாகம்மா குகைக்குப் போற பாதை இது தானே? நாங்க அப்படியே சுயம்பு நாக பைரவி கோவிலுக்குப் போகணும்"



"ஆங்... இதே பாதை தான் தாயீ..." இடதுபக்கம் பிரிந்த பாதையை சுட்டிக் காட்டினார் பூசாரி.

மூவரும் மௌனமாய் நடந்தனர்.

இந்துவுக்கு முதுகுப் பக்கம் குறுகுறுவென்ற உணர்வு ஏற்பட... சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

பூசாரி தனது சிவந்த விழிகளால் அவளை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும்... அவளது முகம் வாடியது.

நொடிப் பொழுதில் பூசாரி முகத்தில் புன்னகையை வரவழைத்துக் கொண்டு.... கை கூப்பினார்.

பதிலுக்கு இந்துவும் கை கூப்பினாள். பூசாரியின் விழிகளில் ஒரு மின்னல் வெட்டுத் தோன்றி மறைந்தது. அவர் திரும்பிப் பார்த்தபோது கிழவி... நடுத்தர வயது நாகம்மாவாக மாறிப் போயிருந்தாள்.




நாகம்மா குகை!

"குகை கொஞ்சம் பெரிசாத்தான் இருக்குல்ல சிவா!" குகை வாசலில் நின்றபடி மெல்ல எட்டிப் பார்த்தாள் மிதிலா.

"ஆமா... உள்ளே அந்தகார இருட்டா இருக்கும் போலிருக்கே? சுளுந்து வெளிச்சம் எதுவும் தெரியலையே? வேணாம் மித்தி! நேரா சுயம்பு நாக பைரவி கோவிலுக்குப் போயிடலாம். அந்த வேலை இன்னமும் பாக்கி இருக்கே?

வந்த அன்னிக்கே எல்லா ரிஸ்கையும் எடுக்கணுமா? உனக்கு வேற கையில காயம் பட்டிருக்கு... பாரு! வா... நேரா மலை உச்சிக்குப் போயிட்டு... பார்த்துட்டு திரும்பிடலாம்.

சாவகாசமா நாளைக்கு வந்து துப்பு துலக்குவோமே? அதுக்கு முன்னாடி... கை கால் முடங்கிக் கிடக்கிறவங்க கிட்டே இருந்து தகவல்களைத் திரட்டிக்கிறது நல்லதில்லையா? அதுக்குத் தான் சொல்றேன்..."

"அதுவும் சரிதான் சிவா" என்று அரை மனதுடன் மேலே ஏறிச் சென்ற பாதையில் செல்லத் தயாரானாள்.

குகையைச் சுற்றிலும் ஏராளமான செடி கொடிகள்தான்... பெயர்

தெரியாத காட்டுப் புஷ்பங்கள் மலர்ந்து மனதை ஈர்த்தன.

குகையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தாள் மிதிலா.

"மித்தி! இது என்ன மரம்? பூவே ரொம்ப வித்தியாசமா இருக்கே?" கீழே உதிர்ந்திருந்த ஒரு பூவை எடுத்து ஆராய்ந்தபடி கேட்டாள் இந்து.

"இது நாகலிங்க மரம்... பூ பேரு கூட 'நாகலிங்கப் பூ' தான். நடுவுலே இருக்கு பாரு... லிங்கம் மாதிரி அமைப்பு!... லிங்கத்துக்கு மேலே நாகம் படமெடுத்தாப்பல இருக்கு பாரு...

அற்புதமான சிருஷ்டி இல்ல? இது பூஜைக்கு ரொம்பவும் உகந்த பூ... புராதன சிறப்புப் பெற்ற சிவ ஸ்தலங்கள்லே... ஸ்தல விருட்சமா இந்த அரிய மரம் இப்பவும் இருக்கு."

"லிங்கத்துக்கு மேல குடை கவிஞ்சாப்பல நாகம் இருக்கிற மாதிரி... ஃபென்டாஸ்டிக் மித்தி!"

அவர்கள் பேசியபடியே... சுயம்பு நாக பைரவி கோவிலை அடைந்தனர்.

சிறிய கற்கோவில் தான்! கர்ப்பக் கிருகத்தின் முன்னே சிறு மண்டபம் போன்ற அமைப்பு... கோவிலுக்குப் பின்னே மிகப் பிரம்மாண்டமான ஆல விருட்சம்... ஏராளமான விழுதுகளுடன் கம்பீரமாக நின்றிருந்தது. ஆலயக் கருவறை சாத்தப் பட்டிருந்தது.

கோவிலுக்கு எதிரே ஏராளமான நிழல் தரும் அடர்ந்த மரங்கள்... மர நிழலில் பரதேசிகள்... ஆண்டிக் கோலத்தில் இருந்த சாமியார்கள்...

அவர்களுடன் கை, கால்கள் முடங்கிப் போன ஊனமுற்றவர்களும் அமர்ந்திருந்தனர்.

"சிவா! இந்தா... கேமிராவைப் பிடி! சில ஸ்நாப்ஸ் எடு... நான் அவங்ககிட்ட விஷயத்தைக் கறக்கறேன்."

சிவா கோவிலை ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டான்.

மிதிலா நடுத்தர வயதிலிருந்த தாடிக்கார ஆசாமியை நெருங்கினாள்.

"வணங்கமுங்க... நீங்க எல்லாரும் நாகம்மா சாபத்தால முடங்கிப் போயிட்டீங்கன்னு சொல்றாங்களே...? அதைப் பத்திக் கொஞ்சம் சொல்ல முடியுமா?"

"ஏம்மா... திடுதிப்புன்னு வந்து கேள்வி கேட்கறியே? நீ யாரு? எங்கேயிருந்து வர்றே?"

"என் பேர் மிதிலா. நான் ஒரு ஃப்ரீலான்ஸ் பத்திரிகை ரிப்போர்ட்டர். உங்களைப் பத்தி கேள்விப்பட்டேன். அதான் பார்க்க வந்திருக்கோம்."



"உனக்கு என்ன விஷயம் தெரியணும்னு சொல்லும்மா."

"நாகம்மாவைப் பார்க்கப் போய் உங்களுக்கு இப்படி ஆயிடுச்சா? எதை ஆராய முயற்சி பண்ணி... இந்தத் தண்டனைக்கு ஆளானீங்க?"

"நாகம்மா குகையை ஆராயலாம்னு ஆர்வம்!... அந்தக் குகையை ஆராய்ஞ்சுட்டு அதுக்கு அப்புறமா... அதோ அங்க இருக்கிற பைரவி குகையில என்னதானிருக்குன்னு பார்த்துடணும்னு ஒரு வேகம்...

அந்த வேகத்துல நாகம்மா குகைல நுழைஞ்சேன்."

"அந்தக் குகைல அப்படி என்ன பார்த்தீங்க?"

"வேண்டாம்மா... அத மட்டும் கேக்காதீங்க... பார்த்ததுக்கே இப்படி ஊனமா முடங்கிப் போய் கிடக்கிறோம்... பார்த்ததை வெளியில சொன்னா... என்ன கதியாவோம் சொல்லு?"

"நாகம்மாவைக் கும்பிடத்தானே போனீங்க? வேற எந்த எண்ணத்துல போனீங்கன்னு தெளிவா சொல்ல முடியுமா?"

"இதெல்லாம் உண்மையா, பொய்யான்னு ஆராய ஆர்வம் வந்து கிளம்பிட்டேன். அவ்வளவு தான் நான் சொல்ல முடியும்.

நீங்க எப்படிக் கேட்டாலும் நான் அங்க பார்த்ததை வெளியில சொல்ல மாட்டேன். விட்ருங்க... நான் மட்டுமில்ல... இங்க என்ன மாதிரி தண்டனையை அனுபவிச்சுட்டிருக்கிற யாருமே... வாயைத் திறக்க மாட்டாங்க.

எங்களுக்குக் கூடியசீக்கிரம் விமோசனம் கிடைச்சுடும்னு அருள்வாக்கு கிடைச்சிருக்கு.

விமோசனம் மட்டும் கிடைச்சதுன்னா... திரும்பிக் கூடப் பார்க்காம அவங்கவங்க வீட்டுக்குப் போய் சேர்ந்துடுவோம். இதுக்கும் மேல எதையும் கேட்காதீங்க... கையை, காலை பத்திரமா வச்சுக்கிட்டு ஊர் போய் சேர்ந்துடுங்கம்மா... இல்லேன்னா... எங்க கதி தான் உங்களுக்கும் வரும்!"

உள்ளூர ஏமாற்றம் முற்றுகையிட... வாடிய முகத்துடன் திரும்பினாள் மிதிலா.

"மித்தி! எவ்ளோ பெரிய ஆலமரம் பாரு... எக்கச்சக்க விழுதுகளோட... ஒவ்வொரு விழுதுக்கு அடியிலும் சகுண்டி மணியைக் கட்டித் தொங்க விட்டிருக்காங்க பாரேன்." சிவா மெல்ல முணுமுணுத்ததும் திரும்பிப் பார்த்தாள்.

"ஆமா... கோவிலையும் அந்த ஆலமரத்தையும் சேர்த்து ஒரு பிரதட்சணம் வந்துடலாம்... அந்த பைரவி குகையையும் பார்த்த மாதிரி இருக்குமே?"

பிரதட்சணமாய் வந்தபோது பைரவி குகைக்கு அருகே வந்ததும் மிதிலாவுக்கு அவளையும் அறியாமல்... இருதயமே தடதடத்தது.

ஜிவ்வென்று மேனி புல்லரித்தது: ஒரு அடி அளவே உள்ள குகை வாசல் இறுக மூடப்பட்டிருந்தது.

மூடப்பட்ட குகை வாசலில் மஞ்சளும், குங்குமமும் தீற்றலாய் சாற்றப்பட்டிருந்ததைக் கண்டதும்... சட்டென்று நின்றாள்.

"சிவா! 'இதெல்லாம் கண் துடைப்பா இருக்குமோ? ஏமாத்துற 'சாமியார்த்தனமா' இருக்குமோ'ன்னு... முன்னே எனக்கு சில சந்தேகங்கள் இருந்துச்சு.

இங்க வந்ததுக்கு அப்புறமா... ஐ மீன் சுருளி மலையில கால் பதிச்சதிலே இருந்து – அதுவும் அந்த சித்தரோட தரிசனம் கிடைச்சதுக்கு அப்புறமா... நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்.

இதெல்லாமே நமக்கு அப்பாற்பட்ட சக்தியால தான் நடக்குது. நாகம்மா சாதாரண மனுஷி இல்ல... அவங்க ஒரு தெய்வப் பிறவியா? இல்ல... பெண் சித்தரா?ன்னு தான் தெரியலை."

"எனக்கும் அப்படித்தான் தோணுது மித்தி!"

"சரி... பார்க்க வேண்டியதைப் பார்த்தாச்சு... நாகம்மாவோட தரிசனம் தான் கிடைக்காம போச்சு! வாங்க இறங்கிடலாம்... ரொம்பவே டயர்டா இருக்குல்ல?" கேட்டபடி மெல்ல நடந்தாள் மிதிலா.

"இந்த பிரமாண்ட ஆல விருட்சம்... அதோட விழுதுகள்... இந்த கற்கோவில்... இதை நைட்டுலே பார்த்தா ரொம்பவே பயமா இருக்குமில்ல மித்தி?"

"உம்... இதுல சதா குகை வாசம் பண்ணி... பவுர்ணமி அன்னிக்கு இங்க வந்து பூஜை செஞ்சு முடிச்ச கையோட படுத்து ஊர்ந்து சின்ன குகையில நுழைஞ்சு... சதுரகிரி மகா லிங்கத்தை தரிசனம் பண்ணப் போறாங்களே நாகம்மா! ரியலி ஷி இஸ் வெரி கிரேட் இல்லியா இந்து?"

"கண்டிப்பா அவங்க சாதாரண பெண்ணா இருக்கவே முடியாது மித்தி" இந்து கூறி முடித்தது தான் தாமதம்...

மிதிலாவுக்குள் ஒரு உறுதியான எண்ணம் உதித்தது.

"மடத்துல... இன்னிக்கு நைட் இவங்க ரெண்டு பேரும் அசந்து தூங்கினதும்... தனியா புறப்பட்டு வந்துடணும்.

சித்தரோட தரிசனம் எதிர்பாராம கிடைச்சது. நாகம்மா குகை வாசல்லே



மனமுருகி மன்றாடினா... நிச்சயமா நாகம்மா தரிசனமும் கிடைக்கும். நைட்லே தைரியமா வந்து தான் தீரணும்'

விதி... தன் விபரீத விளையாட்டைத் தொடங்க ஆர்வமாய் காத்திருந்தது.




மடம் சற்றே விசாலமாகத் தான் இருந்தது. இரண்டு பெரிய அறைகள்... அந்த அறைகளுக்குப் பொதுவாக கல் தொட்டியுடன் கூடிய குளியலறை!

தடுப்புடன் கூடிய சிறு அறை... உடை மாற்றுவதற்குத் தோதாக... அவ்வளவு தான் –

சிமெண்ட் தரை தான்... பெருக்கிப் பல நாட்கள் ஆகி விட்டாற் போன்று தூசும் தும்புமாய் இருக்கவே... மிதிலாவும் இந்துவும் ஆளுக்கொரு துடைப்பத்தை எடுத்துப் பெருக்கித் தள்ளினார்கள்.

"பூசாரி தினமும் மடத்துக்கு வந்து தங்க மாட்டாரு போலிருக்கு. அவரு இங்க வந்தே ரொம்ப நாளாயிருக்கும் போல...? ஒரே குப்பையா கிடக்கு பாரு இந்து?"

"ஆமாமா... மலையில சுருளி ஆண்டவர் சன்னதியிலேயே தங்கிடறாரு போலிருக்கு"

இருவரும் கல்தொட்டியிலிருந்த தண்ணீரை மொண்டு கைகளை அலம்பினார்கள்.

பனிக்கட்டியைப் போல் தண்ணீர் சிலீர் என்றிருந்தது.

"அம்மாடி! குளிர் ஏகத்துக்கும் இருக்குல்ல மித்தி?" என்றபடி இந்து வெளிப்பட்ட போது... சிவா ஒரு கேரி பேக்கில் மலை வாழைப் பழங்களையும் பிஸ்கெட் பாக்கெட்டுகளையும் வாங்கிக் கொண்டு வந்தான்.

"வெளியில குளிரு அப்படியே வெட வெடன்னு நடுங்க வைக்குது இந்து!

டீக்கடையில டிபன் எதுவும் கிடைக்கல... அருவிக்கு குளிக்க வர்ற ஜனங்களை நம்பித்தான்... கடையை நடத்தறாங்க போல...

இன்னிக்கு ரொம்ப சொற்பமான ஜனங்கதான் வந்தாங்க போல...

இட்லி எதுவும் போடலை...

நல்ல காலம்! அவங்க கடையை மூடப்போற நேரத்துல நான் போனதாலே... பழங்களையும் பிஸ்கெட் பாக்கெட்டுகளையுமாவது வாங்க முடிஞ்சது"

"கிடைச்ச வரைக்கும் போறும் சிவா! இந்த மட்டுமாவது இந்த மடத்துல தங்க அனுமதி கிடைச்சதே? பூசாரி ஐயாவுக்குத் தான் நன்றி சொல்லணும்"

"சரி மித்தி... நாளைக்கு நாம்ப என்ன செய்யப் போறோம்? ஏதாவது பிளான் வச்சிருக்கியா? தூங்கறதுக்கு முன்னாடியே பக்காவா டிஸைட் பண்ணி வச்சிட்டாத்தான் நல்லது."

"அந்த வைத்தியரம்மா பேசினதைக் கேட்ட இல்ல சிவா? வர வர இந்த வனத்துல தீய சக்திகளோட நடமாட்டம் ஜாஸ்தியா போச்சுன்னு சொன்னாங்களே?

யாரோ ஒரு வெளிநாட்டுக்காரனைப் பத்திக்கூட சொன்னாங்க...

யார் அவங்க? எங்கே இருந்து வந்திருக்காங்க? ஜனங்களுக்கு அருள் வாக்கு சொல்லி தீராத வியாதிகளுக்கு மூலிகை மருந்து தந்து குறை தீர்த்து வச்சுட்டிருந்த நாகம்மா... சமீப காலமா யாரையும் பார்க்காம போனதுக்கு... அவங்க தானே காரணம்? அவங்களைப் பத்தியும் துப்பு துலக்கணும் சிவா"

"கண்டிப்பா மித்தி! முடிஞ்சா கையும் களவுமா பிடிச்சு மாட்டி விட்டிரணும்."

"சிவா... சிவா! கொஞ்சம் வெளியே வாங்களேன். இந்த வனாந்தரம்... ஊதல் காத்து... காத்துலே அசையற மரங்கள்... நிலா நட்சத்திரங்களைக் கொஞ்ச நேரம் நின்று ரசிச்சுட்டு வரலாமா?

ரொம்ப தூரம் போக வேணாம். இங்க தான்... அந்த சின்ன ஆத்தங்கரையோரமா நின்று... ஜஸ்ட் ஃபைவ் மினிட்ஸ் ராத்திரி நேரத்து வானத்தை ரசிச்சுட்டு உடனே திரும்பிடலாம்.

ப்ளீஸ்! எனக்காக வாங்க அத்தான்–" –உரிமையாய் சிவாவின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் இந்து.

"இந்த வனாந்தரத்துல ராத்திரி நேரத்து வானத்தை ரசிக்கப் போறியா? வானளாவி வளர்ந்த விருட்சங்களைப் பார்த்தாலே... அமானுஷ்யமா மயிர்க்கூச்செறியுது... நீ வேற...?" சிவா ஏதேதோ சாக்குப் போக்குகளைச் சொல்லித் தவிர்க்கப் பார்த்தான்.



அவனுக்கு மிதிலா என்ன நினைத்துக் கொள்ளப் போகிறாளோ என்று தர்ம சங்கடமாய் இருந்தது.

"பக்கத்துல தானே கூப்பிடறா– ரொம்ப ஆசைப்படறாள்லே? கூட்டிட்டுப் போயிட்டு வர்றதுக்கு என்னவாம்?"

"உன்னை என்னாலே புரிஞ்சுக்கவே முடியலைப்பா... இந்து... வா போகலாம்!" முணுமுணுத்துக் கொண்டே வெளியேறினான் சிவா.

அவர்கள் இருவரும் சென்றதும்... சில நிமிடங்களில் டம டமவென்ற இடிச்சத்தம்!

மிதிலா மடத்தின் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

அதி பயங்கர வெளிச்சத்தோடு மின்னலொன்று வானில் முகம் காட்டி விட்டுப் போனது...

அந்த வெளிச்சத்தில்... இந்துவும் சிவாவும் முதுகு காட்டியபடி ஆற்றங்கரையருகே நிற்பது தெரிந்தது.

அடுத்த சில கணங்களில்– மீண்டும் டமடமவென்று இடிச்சத்தம் கேட்டது தான் தாமதம்... இந்துவும் சிவாவும் இறுகக் கட்டியணைத்துக் கொண்டனர்.

இந்து பயந்து போய் சிவாவை ஆரத் தழுவிக் கொண்டாளா? அல்லது... பயந்து போன இந்துவை சிவாவே... இதுதான் சாக்கு என்று இழுத்து அணைத்துக் கொண்டானா?

அதற்கு மேல் அந்தக் காட்சியைக் காண... மிதிலாவுக்கு தெம்பு இருக்கவில்லை.

இதயத் துடிப்பு எகிற ஆரம்பித்தது. ஜன்னலை விட்டு விலகி வந்து தரையில் அமர்ந்து சுவரில் சாய்ந்து விழிகளை மூடி... ஆழ மூச்செடுத்தாள்.

இதுவே வேறொரு சமயமாக இருந்தால்... சிவாவின் மேல் கொதித்துப் போயிருப்பாள்.

ஆனால், அவளது மனம் முழுவதுமாக நாகம்மாவை தரிசிக்க வேண்டும் என்ற எண்ணம் தான் மேலோங்கி நின்றது.

'நான் என் கடமையைச் செய்ய வந்திருக்கிறேன். செவ்வனே செய்து முடித்து வெற்றியுடன் திரும்பிச் செல்ல வேண்டும்.

அதை விட்டு விட்டு... எனது சொந்த விருப்பு வெறுப்புகளைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தால்... கவனம் சிதறி விடக்கூடும்...'

மனதைத் தட்டி அடக்கி ஒரு நிலைக்குக் கொண்டு வந்து – சிந்தனையில் காலையில் பார்த்த சித்தரைக் கொண்டு வந்தாள்.

விழி மூடி தியானித்தாள்.

சிவாவும் இந்துவும் கலகலவென்று சிரித்தபடி உள்ளே வந்தனர்.

"மித்தி! வானத்துல நட்சத்திரங்களைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டுப் போயி ஏமாந்தேன்.

மேகக் கூட்டமா இருக்கிறதால ஸ்டார்ஸ் ஒண்ணுமே தெரியல.. பயங்கர இடி மின்னல்! தூறல் போட்டுச்சு... ஓடி வந்துட்டோம்.

பெரிய மழை வரும் போலிருக்கு மித்தி! ஆத்தங்கரையில கமகமன்னு தாழம்பூ வாசம்.. சிவா எனக்கு இந்தத் தாழம்பூவை... புதர்லேருந்து பறிச்சுக் கொடுத்தாரு"

சிவா மௌனமாக முதுகுகாட்டிப் படுத்தபடி "குட் நைட் மித்தி" என்று கூறி விட்டுப் போர்வையைப் போர்த்திக் கொண்டான்.

"இன்னிக்கு நிறையவே அல்லாடிட்டோம். அடிச்சுப் போட்ட மாதிரி இருக்கு... தூங்கலாம்! குட் நைட் இந்து" என்று மிதிலா சுவரோரமாய் படுத்தபோது... உரிமையாய் அவளது இடுப்பில் கையைப் போட்டபடி உறங்கினாள் இந்து.

படுத்த மாத்திரத்தில் தூக்கம் கண்களைக் கழற்றிக் கொண்டு வந்தது.

சீரான குறட்டையொலி எழுப்பியடிபடி... சீக்கிரமே உறங்கி விட்டான் சிவா. இந்துவும் ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து போனாள்.

மிதிலாவையும் தூக்கம் இழுத்துக் கொண்டு போய் விட்டது. அவர்களிருவரும் தூங்கட்டும் என்று காத்திருந்தவள் தான்... தன்னையும் மீறி அசந்து விட்டிருந்தாள்.

"மிதிலா! மிதிலா!" – யாரோ அழைக்கும் குரல் கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

'யார்...? யார் என்னை அழைத்தது? இந்துவும் சிவாவும் ஆழ்ந்த தூக்கத்திலிருக்கிறார்களே?

வேறு யார் என்னைக் கூப்பிட்டிருப்பார்கள்?' திகிலுடன் பார்வையை நாலாபுறமும் சுழற்றினாள்.

அவளது பார்வை ஜன்னலில் வந்து – திக்கென்று அதிர்ந்து நிலைத்தது. அதிர்ச்சி உடம்பை உதறிப் போட்டது.

மின்னல் வெளிச்சத்தில்... ஜடாமுடியுடன்... நீல விழிகளுடன் – அவள் மலையில் சந்தித்த சித்தர்!

"நாகம்மாவை சந்திக்கணும்னு ஆசைப்பட்டாயே மிதிலா... வருகிறாயா?



கொஞ்ச நேரத்தில உன் ஆசை நிறைவேறும். வா..."

"ஆஹா... நான் எவ்வளவு புண்ணியம் செய்தவள்? ஒரு சித்த மகா புருஷர்... யார் கண்ணுக்கும் புலப்படாத ஒரு மகான்... தபஸ்வி... என்னைத் தேடி வந்து அழைக்கிறாரே? என்ன தவம் செய்தேனோ நான்?"

மனதில் பரவச உணர்வு... இதயத்தில் தெய்வீக அதிர்வு...

நெல்முனை அளவுகூட ,அவள் யோசிக்கவே இல்லை. சட்டென்று மடத்தை விட்டு வெளியேறினாள்.

பத்தடி தூர இடைவெளி விட்டு சித்தர் முன்னே நடக்க... ஓட்டமும் நடையுமாகப் பின் தொடர்ந்து மலைப் பாதையில் முன்னேறினாள் மிதிலா.

சிவப்புக் கம்பளம் விரித்து அவளை வரவேற்க ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தது ஆபத்து!




நடுநிசியில் யாருக்கும் தெரியாமல்... நாகம்மாவின் குகைக்குச் செல்ல வேண்டும் என்று முன்கூட்டியே தீர்மானித்து விட்டதால்... கையடக்க சிறு டார்ச்சை இடுப்பு மறைவில் ஏற்கனவே செருகி வைத்திருந்தாள் மதிலா.

ஆற்றைக் கடந்து மலைப் பாதையில் ஏற ஆரம்பித்ததும்... சின்னத் தூறல் வலுத்து பெரு மழை பெய்ய ஆரம்பித்தது.

வனாந்தரமாதலால்... காதைப் பிளக்கும் படியான இடிச் சத்தங்களுடன்... கண்களைக் குருடாக்கும் மின்னல்களுடன் – வானமே பொத்துக் கொண்டதைப் போல்... மழை கொட்டியது. சுழன்றடித்த காற்றில் மரங்கள் பேயாட்டம் போட்டன.

அவ்வப்போது மின்னிய மின்னல் வெளிச்சத்தில்... ஜடாமுடியுடன் சித்தர் முன்னே நடப்பதை ஊன்றிப் பார்த்தபடியே பின் தொடர்ந்தாள்.

மழையில் சொத சொதத்த செம்மண் மலைப்பாதையில் நடப்பது பிரம்மப் பிரயத்தனமாக இருந்தது.

சேலை தொப்பலாக நனைந்து குளிரில் வெடவெடத்தபடி நடந்து

செல்வது மிகவும் சிரமமான காரியமாகவே இருந்தது. தட்டுத் தடுமாறாமல் –சளைக்காமல் சீரான வேகத்தோடு சென்று கொண்டிருந்தார் சித்தர்.

அவரது வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறித்தான் போனாள் மிதிலா.

'யாருக்கும் கிடைக்காத பாக்கியம் நமக்குக் கிடைத்திருக்கிறதே...' என்ற மகிழ்வில்... அவளுக்கு அசாத்திய தைரியம் உதித்திருந்தது.

சித்தர் அவ்வப்போது மின்னல் வெளிச்சத்தில் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி தான் நடந்தார்.

சுருளி ஆண்டவர் சன்னதியிலிருந்து இடது பக்கமாய்ச் சென்ற பாதையில் சிரமப்பட்டு ஏறியபோது... சித்தர் கண்ணுக்குப் புலப்படவில்லை. சிறு டார்ச் வெளிச்சத்தை சுழற்றி சுழற்றிப் பார்த்தாள்.

மழையின் வேகமும் சற்று மட்டுப்பட்டிருந்தது.

'சித்தர் மறைந்து விட்டாரே? மேற்கொண்டு 'நாகம்மா குகைக்கு தனியே செல்வதா?.. வேண்டாமா?'

மனதில் ஒரு கணம் தயக்கம் எட்டிப் பார்த்தது.

'இன்று நாகம்மாவை சந்தித்தே ஆக வேண்டும்.

சித்தர் வேறு... 'உன் ஆசை இன்று நிறைவேறும்' என்று கூறினாரே?

அப்படியென்றால்... நாகம்மாவின் தரிசனம் எனக்குக் கிட்டப் போகின்றது என்று தானே அர்த்தம்?

இதுவரை வழித்துணையாக சித்தர் வந்ததே பெரிய பாக்கியம் தான்...

இன்னும் சிறிது தூரத்தில் நாகம்மாவின் குகை வந்து விடுமே!' சேலைக் கொசுவத்தை இடுப்பில் செருகிக் கொண்டு நடையை எட்டிப் போட்டாள்.

'டுர் டுர்... கிர்... கிர்... ட்விட்... ட்விட்' –வனாந்தரத்தில் விதவிதமான விநோத ஒலிகள் எழும்பி நடுநிசியில் அமானுஷ்யத்திற்கு பக்க வாத்தியம் வாசித்தன.

நாகம்மாவின் குகை!

இந்தக் குகை பகலிலேயே அந்தகார இருட்டாக இருந்ததே?

நமக்குத்தான் சித்தரின் அருள் பரிபூரணமாக உள்ளதே?

எதற்குப் பயப்பட வேண்டும்?

துணிந்து உள்ளே நுழைந்து பார்த்துவிட வேண்டியது தான்!' – குகை வாசலை நெருங்கினாள் மிதிலா.

"உஸ்... ஸ்ஸ்... ஸ்ஸ்ஸ்" –குகைக்குள்ளிருந்து திடீரென்று மிகப் பெரிய



பாம்பு சீறுவது போன்ற சத்தம் கேட்டு... அவளை அதிர வைத்தது.

சில கணங்கள் தயங்கி நின்றாள்.

'ஸ்வாமி! எனக்கு உங்களுடைய பரிபூரண ஆசி கிட்டியிருக்கு. உங்க வாக்கு பொய்க்காது– நாகம்மாவை சந்திக்கணும்ங்கிற ஆசை நிறைவேறும்னு– நீங்க தானே சொன்னீங்க?

உங்க மேல பாரத்தைப் போட்டு... உள்ளே போறேன். நீங்க தான் எனக்குத் துணையா இருக்கணும்.'

அவள் உள்ளே செல்ல யத்தனித்தபோது– சட்டென்று அவளது தோளின் மீது ஒரு கரம் படிந்தது.

கிலியுடன் மெல்லத் திரும்பிப் பார்த்தாள்...

நனைந்த சேலையில் புறாக்குஞ்சு போல் வெட வெடத்தபடி இந்து நின்று கொண்டிருந்தாள்.

"இ... இந்து! நீயா? நீ... எப்படி.... வந்தே?"

"உன் இடுப்புல தானே கை போட்டுத் தூங்கினேன்? கையை விலக்கிட்டு நீ எழுந்ததுமே... எனக்கும் முழிப்பு வந்துடுச்சே. ஏதோவொரு தீர்மானத்தோட தான் நீ தனியா போறியோன்னு பட்டுது... தூரத்துல பார்த்தா சித்தர் மாதிரி நடந்து போயிட்டு இருந்தாருல்ல?

எஸ்... மித்தி! காலையில அவரைப் பார்க்க கொடுத்து வைக்கல. இப்போ எனக்கு அவர் தரிசனம் கிடைச்சிருச்சே! நானும் மவுனமா உன்னைத் தொடர்ந்து வந்தேன்.

உன்னை ஃபாலோ பண்ணினதால தானே... எனக்கு சித்தர் தரிசனம் கிடைச்சது?

இதுக்கும் மேலே எதுவும் பேசாதே மித்தி! உன் பேச்சை நான் கேக்க மாட்டேன். உனக்கு எதுவோ... அதுவே எனக்கும் நடக்கட்டும்.

ஆபத்து வந்தா என்ன இப்போ? ஆறிலும் சாவு... நூறிலும் சாவு... துணிஞ்சு உள்ளே நுழை... நானும் கண்டிப்பா வருவேன். வா... சேர்ந்தே போகலாம்," அவளது கையை இறுகப் பிடித்துக் கொண்டாள் இந்து.

"என்ன சவுண்ட் மித்தி இது? பாம்போட சீற்றமா? சவுண்டைப் பார்த்தா– பெரிய அனகோண்டா சைஸ் பாம்பு சீறுகிற மாதிரியில்ல சத்தம் வருது?"

"உஸ்! எதுவும் பேசாதே... இதெல்லாம் சோதனையாக்கூட இருக்கலாமில்ல... வா! நான் முதல்லே உள்ளே நுழையறேன்."

சிறிய டார்ச்சை உயிர்ப்பித்தபடி குகைக்குள் புகுந்தனர்.

கரடு முரடான பாறைகளாலான குகைதான்!

கற்களால் உருவான மேடை போன்ற அமைப்பில்... சிறு பீடம்!

பீடத்தில் மான் தோல் விரிக்கப்பட்டிருந்தது.

திடீரென்று... பாம்பு சீறும் சப்தம் நின்று போய்... ஒரு அமானுஷ்ய நிசப்தம் நிலவியது.

மறுகணம்... அந்தக் கானகமே கிடுகிடுக்கும் வண்ணம் பயங்கர சிரிப்பு சப்தம் கிளம்பியது.




குகையில் அந்த சிரிப்பு சப்தம் மீண்டும் மீண்டும் எதிரொலித்து, அவர்களைக் குலை நடுங்க வைத்தது.

இந்து நடுநடுங்கிப் போய் மிதிலாவை இறுகக் கட்டி ஒண்டிக் கொண்டாள்.

"தோ பாரு இந்து! நாம்ப எந்தக் கெட்ட எண்ணத்தோடவும் இங்கே வரலை... நமக்கு ஒண்ணும் ஆகாது. பயப்படாதே நாகம்மாவோட தரிசனம் கிடைக்காம... நாம்ப இந்தக் குகையை விட்டு நகரவே கூடாது.

பாம்பு சீறின சப்தம் கூட இப்போ அடங்கிடுச்சு பார்த்தியா? கண்டிப்பா இன்னிக்கு அவங்க தரிசனம் கிடைக்கும்னு சித்தர் கூட சொன்னாரு... பயப்படாம நம்பிக்கையோட இரு! நமக்கு ஒண்ணும் ஆகாது இந்து."

அவளை ஆரத்தழுவியபடி அவளது புஜத்தைத் தட்டினாள் மிதிலா.

"ஹஹ்ஹஹ்ஹா... ஹா... ஹஹ் ஹா..."

சிரிப்பு சப்தம் சட்டென நின்றது. அதன் எதிரொலி அடங்க சில கணங்கள் பிடித்தன.

மிதிலா டார்ச் வெளிச்சத்தால்... குகையை சுற்றும் முற்றும் துழாவிக் கொண்டே இருந்தாள்.

அந்தப் பீடத்தில்... டார்ச் வெளிச்சத்தை மீண்டும் பாய்ச்சியபோது... சட்டென விறைப்பானாள்.



இந்துவும் மிதிலாவின் பார்வை சென்ற திக்கிலேயே பயணித்து விறைத்தாள். திடீரென குகைக்குள் சுளுந்து வெளிச்சம் பரவியது.

பீடத்தில்... மான் தோல் மீது – பத்மாசனத்தில் – தலைவிரி கோலமாய் சிவப்புக் குங்கும நிற கண்டாங்கி சேலை கட்டி அமர்ந்திருந்தாள் நாகம்மா.

விரித்த கூந்தல் ரிஷி பத்தினிகளைப் போன்று திரண்டு ஜடா முடி போல் காட்சியளித்தது.

நெற்றியில் பெரிய பொட்டு பளிச்சென்று துலங்கியது. வயது நாற்பத்தைந்து இருக்கலாம்.

மிகப் பெரிய விழிகள் தான்... அழகான, நீண்ட இமை முடிகளின் தோகையோடு... 'நீல விழிகள்' பளிச்சென்று தெரிந்ததும்... மிதிலா தன்னையும் அறியாமல் கரங்களை தலைக்கு மேல் தூக்கி வணங்கினாள்.

"என் கடமை முடிஞ்சு நான் விரைவில் போகப் போற தருணத்துல... இங்க வந்திருக்கே...

சூட்சுமத்தைத் தெரிஞ்சுக்கணும்னு துடிக்கறியே மிதிலா!

அந்த சூட்சுமம் தெரிஞ்சு போச்சுன்னா... நீ அதைப் பற்றி வெளியில சொல்ல மாட்டே... அதைப் பத்தி எழுதத் துணிய மாட்டே... ரகசியத்தை நீயே காக்க ஆரம்பிச்சுடுவே."

"நீங்க போகப் போறீங்களா? அப்படின்னா... உங்களுக்கு அடுத்தாப்பல யார் 'நாகம்மா' ஆகப் போறாங்க? அவங்க எப்போ வருவாங்க? அந்த வாரிசு எப்படி உருவாகிறாங்கன்னு... எனக்குத் தெரிஞ்சுக்க ஆசைம்மா" –தழுதழுத்தாள்.

"லோக க்ஷேமத்துக்காக சித்தர்களோட பிரதிநிதியா இருந்து... இந்த மூலிகை மலையைக் காத்து... ஜனங்களோட குறைகளைத் தீர்த்துட்டு வந்தேன்.

பகவானோட பாதாரவிந்தத்துலே நான் ஐக்கியமாகிற நேரம் வந்தாச்சு.

பயப்படாதேம்மா... லோக க்ஷேமத்துக்கு அடுத்த நாகம்மா உருவாகியாச்சு! ஓலைச் சுவடியில ஒவ்வொரு வாட்டியும் புது நாகம்மாவைப் பத்தின விவரங்கள் வரும்.

அதே பிரகாரம் அந்த நாகம்மாவும் இந்த குகைக்கு வந்திருந்து தொடர்ந்து ஜீவகாருண்ய தொண்டு செய்வாங்க...

வாரிசு இந்த முறையில தான் காலம் காலமா தோன்றிக் கொண்டு இருக்கு...

நாளைக்குப் பவுர்ணமி! என்னோட கடமை முடிஞ்சு நான் போகப்

போற இறுதி நாள்... புது நாகம்மா யார்னு தெரியப்போற நாள்... தீய சக்திகள் அழியப் போற நாள்!"

"ஒவ்வொரு பவுர்ணமி அன்னிக்கும் பைரவி குகை வழியாக போய் மகாலிங்க தரிசனம் செய்வீங்களாமே அம்மா?"

"உண்மைதான் மிதிலா! இதுநாள்வரை தரிசனத்தை முடிச்சுட்டு திரும்பவும் இங்க வந்துடுவேன்... ஆனா இந்தமுறை பகவானோட பாதாரவிந்தத்துலே நான் ஜோதியா ஐக்கியமாயிடுவேன். புது நாகம்மா மட்டும் திரும்ப வருவாங்க."

"சமீப காலமா நீங்க யாருக்கும் தரிசனம் தர்றதில்லை. ஆனா எங்களுக்கு மனமுவந்து தரிசனம் தந்திருக்கீங்க...

இதுக்கு நாங்க நூறு ஜென்மங்கள் தவம் செய்திருக்கணும்," என்றபடி அருகில் நெருங்கி தண்டை அணிந்திருந்த பாதத்தைத் தொட்டு வணங்கினாள் மிதிலா.

"இந்து! நீயும் ஏதாச்சும் கேளு" – மிதிலா இந்துவைத் தூண்டினாள்.

"எ... எனக்கு மூலிகைகளைப் பத்தி முழுசா தெரிஞ்சுக்கணும். அதை வச்சு ஆராய்ச்சி செய்து... அந்த மருந்து மாத்திரைகள் மூலமா... பேஷண்ட்ஸோட நோயைக் குணப்படுத்தணும்."

"ஹஹ்ஹா... ஹஹ்ஹா..." மீண்டும் குகையே அதிரும்படி நகைத்தாள் நாகம்மா.

"மூலிகைகளைப் பத்தித் தெரிஞ்சுக்கணுமா? சீக்கிரமே உனக்கு எல்லா மூலிகைகளும் அத்துபடி ஆயிடும். நோயைக் குணப்படுத்தணுமா? அந்த சேவையை நீ கண்டிப்பா செய்யத்தான் போறே...

இப்போ நீங்க ரெண்டு பேரும் கிளம்பிப் போங்க" – உத்தரவிட்டதும்... இருவரும் பணிந்து வணங்கிவிட்டு குகையை விட்டு வெளியேறினர்.

சுருளி ஆண்டவர் சன்னதி வழியாக... மலைப் பாதையில் நடந்துவந்தபோது... அதுவரை பெய்த சாரல் வலுக்கத் தொடங்கியது.

டார்ச் வெளிச்சத்தில் தடுமாறியபடி, நடையைத் துரிதப்படுத்தியபோது... ஆறேழு முரட்டுத்தடியர்கள் இந்த அழகுப் பதுமைகளை வளைத்துக் கொண்டார்கள்.

"மி... மித்தி! நாம்ப மாட்டிக்கிட்டோம்..." என்றபடி இந்து அவளது முதுகில் ஒண்டினாள்.






"நீ... நீங்க எல்லாரும் யாரு? எங்க வழியை ஏன் மறிக்கறீங்க?" அந்தத் தடியர்களை முறைத்தபடி துணிவுடன் கேட்டாள் மிதிலா.

"இவ்ளோ துணிச்சலா... இந்த மலைக்காட்டுப் பாதையில... நட்ட நடுராத்திரியில ஆம்பிளைத் துணை இல்லாம உலாத்தற குட்டிகளுக்கு... ஒண்ணுமே புரியலையாக்கும்?

வழியை மறிச்சு வளைச்ச காரணத்தைத் தெளிவா சொல்லணுமாக்கும்?" அந்தத் தடியர்களில் நெட்டையாய் இருந்தவன்... இளக்காரமாய் கேட்டான்.

"சந்தன மரங்களை வெட்டி எடுத்துட்டுப் போகலாம்னு வந்தோம்... இங்க வந்தப்புறம் புரிஞ்சுது... மான், புலின்னு மிருகங்களோட தோலை எக்ஸ்போர்ட் பண்ணினா... நல்ல துட்டு வரும்னு தோணுச்சு...

மரங்களோட சேர்த்து மிருக வேட்டையையும் ஆடலாம்னு வனத்தைச் சுத்தி சுத்தி வந்தோம்...

ஓரளவுக்கு வேட்டையாடியாச்சு! வேட்டை ஆட ஆட ஆசைதான் அதிகரிக்குது... அதான் வனத்துலேயே டேரா அடிச்சு தங்கிட்டோம்... எங்க வேலையை இருட்டுல தானே ஃப்ரியா பண்ண முடியும்? அதான்... மிருக வேட்டைக்கு வந்தா... அதிசயமா ரெண்டு பொன்மான் அகப்பட்டிருச்சே? புள்ளி மான், கலைமான்களையே நாங்க விட்டு வைக்கிறதில்லை...

அழகே உருவான பொன்மான்கள்... அதுவும் பெண்மான்களைப் பார்த்ததுமே... வேட்டையாடிடணும்கிற வேட்கை உள்ளுக்குள்ளே உருவாயிடுச்சே?

என்ன... இந்த மான் ரொம்ப மருண்டு மருண்டு பார்க்குதே?

மழையில நனைஞ்சு குளிர்லே வெட வெடக்குதா? வா... கண்ணு! இந்த மச்சானை அணைச்சுக்கிட்டா... குளிரே தெரியாது..."

நடுத்தர உயரத்தில் கட்டுமஸ்தான தேகத்தோட இருந்தவன் பேசியபடியே வந்து... திடுதிப்பென்று மிதிலாவுக்குப் பின்னால் ஒண்டியிருந்த இந்துவைப் பிடித்து இழுத்தான்.

"யூ... பிளடி ராஸ்கல்! ச்சீ... விடுடா என்னை" – கிரீச்சிட்டு அலறினாள்

இந்து.

"ஸ்கௌண்ட்ரல்... பொறுக்கி! விடுடா அவளை.." மிதிலா அவனது பிடியிலிருந்து இந்துவை விடுவிக்கப் போராடினாள்.

நான்கு தடியர்கள் ஓடி வந்து மிதிலாவைக் கோழிக் குஞ்சாய் அமுக்கி இழுத்துச் சென்றார்கள்.

மீதமிருந்த மூவரும் இந்துவைச் சுற்றி வியூகம் அமைத்துக் கொண்டு... வேட்டை நாய்களைப் போல் குதற ஆயத்தமானார்கள்.

"மித்தீ... மித்தீ..." இந்து அலறிய அலறல் கானகம் முழுவதும் மீண்டும் மீண்டும் எதிரொலித்தது.

வெறிநாய்களைப் போன்று தன்னைச் சுற்றி வளைத்துக் கொண்ட தடியர்களிடமிருந்து பலங்கொண்ட மட்டும் போராடிக் கொண்டிருந்த மிதிலாவுக்கு... பீதி அதிகரித்தது.

"எனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை... என்னால் இந்து வீணாக ஆபத்தில் மாட்டிக் கொண்டாளே?

இந்து சொன்னது போல்... ஆறிலும் சாவு நூறிலும் சாவு தான்... உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் கூட பரவாயில்லையே?

ஆனால்... மானத்திற்கு அல்லவா பேராபத்து வந்து விட்டது?

இவர்களிடமிருந்து எப்படி நான் மீளப் போகிறேன்?

இந்துவை எப்படியாவது அவர்களிடமிருந்து எந்த சேதாரமும் இல்லாமல் காப்பாற்ற வேண்டுமே...

பகவானே...! ஏதாவது அற்புதத்தை நிகழ்த்திக்காட்டு!"

அவளுக்குள் வெறி வந்த நேரத்தில்... அவளது புடவையைக் கொத்தாக உருவி எடுத்து விட்டான் ஒரு ரவுடி!

கண்ணிமைக்கும் நேரத்தில் கீழே குனிந்து... கைக்கு சிக்கிய கூரான கருங்கல்லால் ஒருவனது வலது கண்ணில் ஓங்கி குத்தினாள்.

இன்னொருவனின் கன்னத்தில் ஓங்கிக் குத்தி காயப்படுத்தினாள்.

"என்னடி ராங்கி பண்றே?" என்றபடி அவளை இறுகப் பிடிக்க வந்தவனின் முகத்தில் தலையால் பலங்கொண்டமட்டும் மோதவே அவனுக்கு உதட்டில் பல்பட்டு கடகடவென்று இரத்தம் கொட்டியது.

இவளது வெறியையும் வேகத்தையும் பார்த்த ரவுடிகள்... தயக்கமாய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்ட நேரத்தில்...

ரவிக்கை பாவாடையுடன் தபதபவென்று இந்து இருந்த பக்கமாய்



ஓடினாள் மித்தி.

"டேய்... விடுங்கடா அவளை! பொம்பளை கிட்டப்போய் வீரம் காட்ட வந்த பொறுக்கிகளா..." இந்துவை வளைத்துக் கொண்ட ரவுடிகள்... இவள் உச்சஸ்தாயியில் கர்ஜிப்பதைப் பார்த்து விட்டு.... இந்துவை விட்டு விலகி... இவளிடம் திரும்பினார்கள்.

தடதடவென்று மிதிலாவைப் பின் தொடர்ந்து நான்கு ரவுடிகளும் வந்து கொண்டிருந்தார்கள்.

கலைந்த மேலாக்கை அவசரமாகப் போர்த்தி சுற்றிக் கொண்டு தேம்பி அழுதபடி விருட்டென்று ஓடி வந்து மிதிலாவை இறுக அணைத்துக் கொண்டாள் இந்து.

"மித்...தீ! எனக்கு பயமாயிருக்கு... இந்த மிருகங்க கிட்ட இருந்து நாம்ப தப்பிக்க முடியாது போலிருக்கே?

பேசாம வலது பக்கமா இருக்கிற பள்ளத்தாக்குல குதிச்சு உயிரை விட்ருவோமா?"

மூச்சிரைக்க அவளது காதுகளில் கிசுகிசுத்தாள் இந்து.

ஒரு கையால் ஆதுரமாக இந்துவை அணைத்துக் கொண்டாள். மறு கையில் கூரான கருங்கல் மட்டுமே இருந்தது.

'இதை வைத்துக்கொண்டு ஏழு ரவுடிகளை சமாளிக்க முடியாதே?

முன்னும் பின்னுமாக வியூகம் அமைத்து இருவரையும் அமுக்கி விடுவார்களே?

இந்து சொன்னது போல்... பள்ளத்தாக்கில் பாய்ந்து உயிரை விட்டு விடுவோமா?'

"என்னடி நீ பெரிய ஜான்ஸி ராணியா? எங்க கிட்டேயே ராங்கித்தனம் பண்றியேடி?" என்றபடி ஒரு ரவுடி அவளது பின்னந்தலையில் ஒரு மரக்கட்டையால் ஓங்கி அடித்தான்.

"ஆ... அம்மா... ஆ" – அலறியபடியே சரிந்தாள் மிதிலா.

கண்கள் மயங்கி செருகத் தொடங்கின.




'ஐயோ! இந்துவை யார் காப்பாற்றப் போகிறார்கள்? அவளது கதி என்னவாகும்?

கடவுளே!... மகா சித்தரே! நாகம்மா... அவளுக்கு நீங்க தான் துணை...'

மனதில் புலம்பியபடி கண்கள் சொருகத் தொடங்கும் நேரத்தில்.... தலைவிரி கோலமாக நாகம்மா நீல விழிகளை உருட்டி விழித்தபடி தோன்றிய காட்சியை... ஒரு செகண்ட் பார்த்து விட்டு... மறுகணமே மயக்கத்தில் மூழ்கினாள் மிதிலா.

மறுநாள் காலையில் கண் விழித்த போது மடத்தில் சுவரோரமாய் தான் படுத்திருப்பதைக் கண்டு குழம்பிப் போனாள் மிதிலா. தலையில் தடவிப் பார்த்தாள். கட்டுப் போடப் பட்டிருந்தது.

'இங்கே நான் எப்படி வந்தேன்? நேத்து அந்த கும்பல் கிட்டே மாட்டி தலையில அடிபட்டு மயங்கினேனே? இந்து என்ன ஆனாள்?'

திகிலுடன் திரும்பிப் பார்த்தாள்.

கல் தூணில் சாய்ந்தமர்ந்து முழங்கால்களைக் கட்டியபடி புன்னகை பூத்த முகத்துடன் விட்டத்தையே வெறித்துக் கொண்டிருந்தாள் இந்து.

"இந்து! உனக்கொண்ணும் ஆகலையே? நான் மயங்கினப்போ லேசா... நாகம்மா ஸ்பாட்டுலே வந்து நிக்கிறமாதிரி தெரிஞ்சுதே?

அவங்க தான் உன்னைக் காப்பாத்தினாங்களா? என்னை யார் தூக்கிட்டு வந்தது?

நாகம்மா அந்த காவாலிப் பசங்களுக்கு ஏதாச்சும் தண்டனை குடுத்தாங்களா?

தலையில மட்டும் எனக்கு அடி படலேன்னா... நிச்சயம் இதெல்லாம் கனவுதான்னு நெனச்சிருப்பேன்.

நடந்ததை வெளியில சொன்னாக்கூட... யாரும் நம்ப மாட்டாங்கல்ல இந்து?

நடந்த சம்பவங்கள் எல்லாமே கனவு மாதிரி தானே இருக்கு?"



எந்தக் கேள்விக்கும் இந்துவிடமிருந்து பதில் வரவில்லை.

"எழுந்துட்டியா மித்தி? இட்லி வாங்கிட்டு வந்திருக்கேன். அதிகாலையில எழுந்து பார்த்தேன். நீ அனத்திட்டு இருந்தே...

தலையில கட்டு வேற... இந்துகிட்டே கேட்டேன். ராத்திரி தனியா நீங்க மட்டும் ஏன் போனீங்க? என்னையும் கூப்பிட்டு இருக்கலாமே?

சுருக்கமா 'ஆபத்துல மாட்டிக்கிட்டோம். நாகம்மா காப்பாத்தினாங்க' அப்படின்னு இந்து சொன்னா... அதுக்கு அப்புறம் அவ எதுவும் பேசல...

ஏதோ சொர்க்க லோகத்துல சஞ்சரிக்கிற மாதிரி... மேலேயே பார்த்து சிரிச்சிட்டு இருக்கிறா...

உன்கிட்ட என்ன ஏதுன்னு விசாரிக்கலாம்னா... நீயும் அடிச்சுப் போட்ட மாதிரி தலைக் காயத்தோட.... எழுந்துக்கவே இல்ல...

ராஜதுரை மாமா கிட்டே இருந்து எஸ்.எம்.எஸ். வந்திருக்கு. இந்து என்ன மெஸேஜ் அனுப்பிச்சான்னு தெரியல...

சென்னையிலிருந்து மதுரைக்கு ஃபிளைட் பிடிச்சு வந்து மதுரையிலிருந்து இங்கே வரப் போறாராம்...

அநேகமாக இன்னிக்கு மதியத்துக்கு மேல... அவரை எதிர் பார்க்கலாம்.

இன்னொரு பரபரப்பான விஷயம்!

சுருளி ஆண்டவர் கோவில் பூசாரி கொஞ்ச நேரத்துக்கு முன்ன இங்க வந்தாரு... இந்துவையே கண்கொட்டாம பாத்தாரு...

உன்னை வந்து உத்துப் பார்த்தாரு...எழுந்ததும் தீர்த்தத்தை முகத்துல தெளிச்சு குடிக்க வைக்க சொன்னாரு.

அப்புறமா ஒரு விஷயத்தைச் சொன்னாரு... நேத்து நைட்டுலே... குடி போதையில ஆறேழு ரவுடிங்க மலைப்பாதைக்குப் பக்கமா இருக்கிற பள்ளத்தாக்குல விழுந்துட்டாங்களாம்...

அந்த கும்பல் கொஞ்ச நாளா வனத்துல 'நிழல்' காரியங்களைப் பண்ணிட்டிருந்தாங்களாம்...

சந்தன மரங்களை வெட்டி... வன விலங்குகளை வேட்டையாடி ரொம்ப அராஜகம் பண்ணிட்டிருந்தாங்களாம்.

அவங்களுக்கு சரியான தண்டனை கிடைச்சுப் போச்சுன்னு சொன்னாரு...

டீக்கடையில கூட இந்த விஷயத்தைப் பத்தி தான் பரபரப்பா பேசிட்டிருந்தாங்க..." என்றான் சிவா.

மிதிலா விழிகள் விரியப் பார்த்தாள்.

இந்து திடீரென்று 'களுக்' என்று சிரித்தாள்.

"நாகம்மா சரியான சமயத்துல தண்டனை கொடுத்தாச்சு. இன்னொரு களையை வேரோட பிடுங்கி எறிஞ்சுட்டா...நிம்மதியா மூச்சு விடலாம்" என்றாள். இருவரையும் திரும்பிப் பார்த்து கலகலவென்று சிரித்துவிட்டு "பூத நாராயணர் கோவிலுக்குப் போயிட்டு வரேன் மித்தி" என்று கூறி விட்டு... 'சல் சல்' என்று கொலுசு சப்திக்க சென்று விட்டாள் இந்து.

"இந்துவுக்கு ஏதாச்சும் ஆகியிருந்தா... உன்னால தாங்க முடியாதுல்ல சிவா?" அவனது விழிகளை ஆழமாக ஊருடுவிப் பார்த்தாள் மிதிலா.

"என்ன இப்படி கேட்டுட்டே மித்தி? உனக்கு ஏதாச்சும் ஒண்ணுன்னா... என்னால தாங்க முடியுமா சொல்லு?

இனிமேலும் நான் மனசுக்குள்ளேயே பூட்டி வச்சுட்டிருந்தா... நீ வேற விதமா கற்பனை பண்ணிப்பே போலிருக்கே...

இந்து மட்டும் எங்க வீட்டுக்கு வராம இருந்திருந்தா...உனக்கும் எந்த நெருடலும் இருந்திருக்காது.

என்னதான் ஜீனியஸா இருந்தாலும்... நீயும் பெண் தான்னு நிரூபிச்சுட்டே... ஐ மீன்... பொஸஸிவ்னஸ் நிறைய இருக்கு உனக்கு...

மனசு விட்டு சொல்றேன். நீ என்னோட இதயத்துல என்னிக்கோ குடியேறிட்டே மித்தி!

ஐ லவ் யூ ஸோ மச் மித்தி!" என்றபடி அவளது விரல்களுடன் தன் விரல்களைக் கோர்த்துக் கொண்டவன்–

"என்ன கை இப்படி ஹீட்டா இருக்கு?" என்றபடி நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்.

"நேத்து மழையில நனைஞ்சதால நல்ல காய்ச்சல் வந்துடுச்சே மித்தி?" கவலை தொனித்த குரலில் பேசியவனை ஆசையாய் ஏறிட்டாள்.

"நிஜமாத்தான் சொல்றியா சிவா?"

"நிஜமாத்தான் சொல்றேன். காய்ச்சல் அடிக்கிறது உனக்கே தெரியலையா மித்தி?"

"யூ... நாட்டி! நான் அதைக் கேட்கலை. என்னை விரும்பறேன்னு சொன்னே.... ஆனா நேத்து ஆத்தங்கரையில நீ இந்துவைக் கட்டிப் பிடிச்சுட்டு..."

"போச்சுடா! கட்டிப் பிடிச்சுக்கிட்டா... உடனே அது காதல்னு அர்த்தமா மித்தி? இடி மின்னல் வெட்டினதும்... பாவம்! அவ பயந்து போய்



கட்டிக்கிட்டா... அவ்வளவு தான்!"

"அப்பாடா... ஐ... ஐ டூ லவ் யூ சிவா" என்றபடி நீண்ட பெருமூச்சு விட்டவளை... மெல்ல இழுத்து தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

"ஏன் சிவா? இந்து கிட்ட ஒரு பெரிய மாற்றம் தெரியுது இல்ல? நாகம்மாவை தரிசனம் பண்ணினதிலே இருந்து இப்படி மாறிட்டா இல்ல?"

"நேத்து நைட்டுலே நடந்தது எல்லாமே... சினிமாவுல வர்ற காட்சிகள் மாதிரி... ரொம்ப த்ரில்லிங்க இருந்திருக்கு.

நைட்டுலே கொட்டற மழையில மின்னல் வெளிச்சத்துல சித்தரைப் பார்த்திருக்கா... குகையில நாகம்மா தரிசனம்...

அடுத்தாப்பல அந்த கும்பல்கிட்டே மாட்டியிருக்கீங்க... திகிலும் திரில்லுமா நடந்த சம்பவங்கள்... இந்துவை ரொம்பவே 'அப்செட்' ஆக்கியிருக்கும் போலிருக்கு."

"இல்ல சிவா! எனக்கென்னமோ அந்த திரில்லான சம்பவங்களாலே... அவ 'அப்செட்' ஆனது மாதிரி தெரியல...

அவ மனசு முழுக்க 'நாகம்மா' தான் விஸ்வரூபம் எடுத்து வியாபிச்சிருக்காங்களோன்னு படுது.

நாகம்மாவைப் பத்திப் பேசும் போது... அவ கண்ணை கவனிச்சியா? அசாத்திய பளபளப்பு தெரியுது... நாகம்மா மேல தனி ஈடுபாடு, பக்தி, ஆர்வம், ஈர்ப்பு, லயிப்பு, அபிமானம் ஏற்பட்டுப் போச்சுன்னு தோணுது.

நல்ல காலம்! நாகம்மாவோட அனுக்கிரகத்தால கடைசி நிமிஷத்துல தப்பிச்சோம்... இந்துவுக்கு ஏதாச்சும் ஆயிடுமோன்னு பயந்துட்டேன்.

ராஜதுரை சித்தப்பாவுக்கு யார் பதில் சொல்றதாம்? என் நம்பிக்கை பொய்க்கலை...

அந்த மகா சித்தருக்கும், நாகம்மாவுக்கும், பகவானுக்கும் தான் நன்றி சொல்லணும்."

"இன்னிக்குப் பகல் ஃபுல்லா நமக்கு வேலை இருக்காது மித்தி! பவுர்ணமிங்கிறதால ஜனங்க நிறைய வந்துட்டே இருக்காங்க...

நடு நிசியில சுயம்பு நாக பைரவி பூஜை நடக்கும்னு சொன்னியே? ராத்திரியில தான் நமக்கு வேலை... இல்லையா?

ராஜதுரை மாமா வேற மதியத்துக்கு மேல... இங்க வந்துடுவாரே? நடு ராத்திரி பூஜைக்கு அவரையும் அழைச்சுட்டுப் போறோமா? இல்ல மடத்துல அவரை விட்டுட்டுப் போயிடலாமா?"

"நோ...நோ! ராஜதுரை சித்தப்பாவுக்கு ஆன்மீகத்துல நாட்டம் அதிகம்... அவரும் நம்ம கூடவே வரட்டும்... இந்துவும் அப்பாவை நேர்லே பார்த்துட்டா... நார்மலாயிடுவாள்னு நெனக்கிறேன்.

நாகம்மா வேற அவளுக்கு சாதகமா 'அருள்வாக்கு' சொல்லிட்டாங்களா? இந்துவுக்கு அப்படியே குஷி பிய்ச்சுட்டுப் போகுதுன்னு... அப்பட்டமா தெரியுது.

எனக்கும் கூட பூடகமா ஒரு விஷயம் சொன்னாங்க... 'சூட்சுமத்தைத் தெரிஞ்சுக்கிட்டா... நீ அதை எழுதத் துணிய மாட்டே'ன்னு சொன்னாங்க...

'ரகசியத்தை நீயே காக்கத் தொடங்கிடுவே'ன்னும் சொன்னாங்க...

'துப்பு துலக்கி விஷயத்தைக் கண்டு பிடிக்கணும்... அதைப் பத்திரிகையில எழுதி வெட்ட வெளிச்சமாக்கணும்'னு... துடிச்சுட்டு இருந்தவள் தான் நான்!

நடக்கிறதெல்லாம் நமக்கு அப்பாற்பட்ட சக்தியால தான்னு தெரிஞ்சு போச்சு...

தெய்வச் செயல்... சித்த ரகசியம்னு தோணுது.

'தேவ ரகசியங்கள் காக்கப் படணும். வெளியில சொல்லக் கூடாது...' அப்படிங்கிற வலுவான எண்ணம் எனக்கு ஏற்பட்டுப் போச்சு சிவா!"

"அதுவும் சரிதான்.... தலையில வேற அடிபட்டிருக்கு. காய்ச்சல் வேற... டயர்டா இருக்கே... கொஞ்சம் இட்லி சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடு...

கை வசம் எப்பவும் டேப்ளட்ஸ் வச்சிருப்பியே? சாப்பிட்டுட்டு மாத்திரை போட்டுரு மித்தி."

"உம்... இந்து வரட்டும். சேர்ந்து சாப்பிடலாம் சிவா!"

இந்து 'சூர சம்ஹார'த்தில் ஈடுபட்டிருக்கிறாள் என்பதை அவர்கள் எப்படி உணருவார்கள்?






நேரம் நத்தையாக நகர்ந்து கொண்டிருந்தது.

"என்ன சிவா? மணி பத்தே முக்கால் ஆகப்' போகுது. இந்து இன்னமும் காணோம்?

பூத நாராயணர் கோவில்லேயே உட்கார்ந்துட்டாளா? இல்ல... 'மூலிகைச் செடிகளைத் தேடிப் போறேன்'ன்னு... நம்ம கிட்ட சொல்லாம கொள்ளாம... வனத்துக்குள்ளேயே போயிட்டாளா?" மிதிலா கவலையாய் சிவாவை ஏறிட்டாள்.

"அதானே? நேத்து நைட் மலைக்குப் போயிட்டு வந்ததிலேர்ந்தே அவ சரியா இல்ல மித்தி...

ஞானக் கிறுக்கு மாதிரி தனக்குள்ளே ஏதேதோ பினாத்திக்கிட்டு விட்டத்தைப் பார்த்து வெறிச்சு சிரிச்சுட்டிருந்தா...

அவளைத் தனியா அனுப்பிச்சது தப்பாப் போச்சு... 'பூத நாராயணர் கோவில் கூப்பிடு தூரத்துல தானே இருக்கு'ன்னு... நானும் அசால்ட்டா இருந்துட்டேன்.

இரு! நான் போய் அவளைக் கூட்டிட்டு வர்றேன்..." அவன் கிளம்பும் தருணத்தில்... சாவகாசமாய் இந்து உள்ளே நுழைந்தாள்.

"இவ்ளோ நேரமாச்சே... உன்னைக் காணோமேன்னு நாங்க பதறிட்டோம் இந்து! கோவில்லே அப்படியே தியானம் பண்ணிட்டிருந்தியா என்ன?"

"அப்படித்தான் வச்சுக்கோயேன். இப்போ இராகுகாலம் நடந்துட்டிருக்கு இன்னிக்கு வெள்ளிக்கிழமை! பவுர்ணமி வேற...

தீய சக்திகள் அழியப் போற நாள்னு நாகம்மா சொன்னாங்களே? அதான்... தியானம் பண்ணிட்டிருந்தேன்.

அஞ்சு நிமிஷத்துக்கு முன்னால் ஒரு பக்தர் கோவிலுக்கு ஓடி வந்தாரு— இந்த வனத்தோட எல்லைப் பகுதிகிட்டே ஒரு ஜீப் மரத்துல மோதி ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சாம்...

அந்த ஜீப்புல ஒரு வெளிநாட்டுக்காரனும்... காட்டு இலாகாவைச் சேர்ந்த ஒரு ஆளும் இருந்தாங்களாம்... ஸ்பாட்டுலேயே ரெண்டு பேரும் அவுட்டாம்...

மூலிகைங்க இந்த மண்ணோட பொக்கிஷம்...அதைக் கொள்ளையடிக்கணும்னு சுத்தி சுத்தி வந்தாங்கல்ல.

சித்தர்களோட பிரதிநிதியா இருந்து... இந்த மூலிகை வனத்தைக் காத்துட்டிக்கிற நாகம்மா கிட்டேயே ஆட்டம் காட்டினா... இப்படித்தான் அழிஞ்சு போகணும்.

இராகு காலத்துல 'அசுர வதை' முடிஞ்சிருக்கு... ஹஹ்...ஹஹ்ஹா...."

கலகலவென்று அவள் சிரித்தபோது... மிதிலாவின் முகத்தில் கவலை ரேகைகள் படிந்தன.

**ந**ள்ளிரவு!

சுயம்பு நாக பைரவி சன்னதி!

சன்னதிக்கு நேர் எதிரே சாதுக்களும் ஆண்டிகளும் ஏகோபித்த குரலில் 'ஓம்... ஓம்...' என்று பிரணவ மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தனர்.

கை கால்கள் முடங்கிப் போனவர்களும் கண்ணீர் மல்க.. கைகளைத் தலைக்கு மேல் தூக்கிப் பிரார்த்தனை செய்தபடி இருந்த காட்சி... நெஞ்சை நெகிழ வைப்பதாக இருந்தது. சற்று தூரத்திலிருந்த மரத்தடியில் இவர்கள் நின்றிருந்தனர்.

மிதிலா பக்கவாட்டில் திரும்பிப் பார்த்தாள்.

இந்து சிவப்பு வண்ணக் காட்டன் புடவையில் இருந்தாள். சிறு சரிகைக் கரையுடன் இருந்த புடவை... அவளது நிறத்தைத் தூக்கலாகக் காட்டியது.

அவளது முகத்தில் தனி தேஜஸ் மிளிர்ந்தது. அருகிலிருந்த ராஜதுரையின் விழிகளிலிருந்து கண்ணீர் வழிந்தவண்ணம் இருந்தது.

பக்திப் பரவசத்தில் சில பக்தர்கள் கண்ணீர் உகுப்பது சகஜம்தானே என்று மிதிலா தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள்.

சிரசில் ஐந்து தலை நாகம்! புன்னகை பூத்த எழிலான வதனம்! அபய வரத ஹஸ்தம்... பாதங்களில் தண்டையுடன் ஏழடி உயரத்தில் அருள் பாலித்துக் கொண்டிருந்தாள் சுயம்பு நாக பைரவி.

குங்குமக் காப்பில் அம்மனை தரிசிக்க கண்கோடி வேண்டுமே! அம்மன் சிலைக்கு அருகில் ஏழடி உயரத்தில் பெரிய புற்று!

பூசாரிக்கு சன்னதம் வந்தது போல்... வேகமாக பெரிய மணியை ஓங்கி அடிக்க ஆரம்பித்தார்.

சொல்லி வைத்தாற்போல் எங்கிருந்தோ ஜடாமுடியுடன் நிறைய



சாமியார்கள் சன்னதியில் கூடினர். நடுநாயகமாக நீல விழிகள் கொண்ட மகா சித்தர்.

கால்களில் தண்டை ஒலிக்க... நாகம்மா நடந்து வந்து கர்ப்பக்கிருகத்திற்குள் சென்று ஆரத்தி காட்டினாள்.

செவ்வரளி மலர்களை வாரி பைரவியின் பாதங்களில் தூவினாள்.

'ஓம்.... ஓம்... ஓம்... ஓம்... ஓம்' – எங்கும் ஓங்காரம் ஒலித்தது.

சன்னதியின் பின்னாலிருந்த ஆலமரத்தின் விழுதுகளில் கட்டப்பட்டிருந்த சகுண்டி மணிகள் ஒரு சேர ஒலித்தன.

பூஜை நேரத்தில் மிகச் சரியாக விழுதுகள் ஆடி... சகுண்டி மணிகள் ஒலிப்பதைக் கண்டு... ஸ்தம்பித்து விட்டான் சிவா.

பூஜை முடிந்ததும்... நடுநாயகமாக இருந்த நீல விழி கொண்ட சித்தரைப் பணிந்து வணங்கினாள் நாகம்மா... பதிலுக்கு அவரும் வணங்கினார்.

முன் மண்டபத்தை விட்டு இறங்கி ஆல விருட்சத்தோடு சேர்த்து கோவிலை மூன்று முறை வலம் வந்தாள்.

ஆலமரத்தின் இடது பக்கமாயிருந்த குகை வாசலில் நின்றாள். விழிகள் விரியத் திரும்பிப் பார்த்தாள்.

வில்லிலிருந்து அம்பு புறப்பட்டது போல்... மிதிலாவின் அருகே மரத்தடியில் நின்றிருந்த இந்து பாய்ந்தோடினாள்.

நாகம்மாவின் எதிரே நின்று புன்னகைத்தாள். நான்கு நீல விழிகளும் கலந்தன.

"சி... சிவா! என்னது இது? இவ ஏன் அங்க போனா? சித்... சித்தப்பா! மைகாட்... ஐயோ! என்ன நடக்குது இங்கே?

நாகம்மாவின் அடுத்த வாரிசா யார் வரப் போறாங்கன்னு ஆவலா பாத்துட்டிருக்கேன்... இவ ஓடிட்டாளே? இவ தான் வாரிசா?

சித்தப்பா... வாங்க... இந்துவைத் தடுக்கலாம்... உங்களுக்கு ஒரே பொண்ணு சித்தப்பா... இ-இதுக்கு எல்லாம் நான்தானே காரணம்? எனக்கு மனசாட்சி அறுக்குதே?

நானாச்சும் போய்த் தடுக்கிறேன்."

சட்டென்று அவளை இறுகப் பிடித்துக் கொண்டார் ராஜதுரை.

"மித்தி! தெய்வ காரியம் நடக்கிறப்போ குறுக்கிடக்கூடாதும்மா. நானே தைரியமா இருக்கேன் பாரு...

இது தெய்வ சங்கல்பம்! இந்துவுக்கு எவ்ளோ பெரிய பாக்கியம்

கிடைச்சிருக்கு தெரியுமா?

யாருக்கு வாய்க்கும் இந்தக் குடுப்பினை? லோக க்ஷேமத்துக்காக அவ தன்னை தெய்வத்துக்கு அர்ப்பணிச்சுட்டா...

இந்து ஆங்கிலோ இண்டியனா இருந்தாலும்... இனி அவ பக்தர்களால போற்றப் படக்கூடிய யோகினியா இருப்பா...

நாகம்மாவோட வாரிசா பலருக்கு அவ நன்மை செய்யப் போறா... குறைகளைத் தீர்த்து குணப்படுத்தப் போறா...

அவளை மகளா நான் பெத்ததுக்கு ரொம்பவே பெருமைப்படறேன். இனிமே இந்த மலையிலேயே தங்கி துறவி மாதிரி வாழ்நாளைக் கழிச்சுடப் போறேன்.

உன் மூலமாத்தான் எங்களுக்கு இவ்ளோ பெரிய பாக்கியம் கிடைச்சிருக்கு மித்தி!"

மிதிலா வாயடைத்துப் போய் மீண்டும் எதிரே பார்த்தாள்.

தன் பாதங்களில் இருந்த தண்டையைக் கழற்றி இந்துவுக்கு மாட்டி விட்டாள் நாகம்மா.

தன் பாதங்களில், பணிந்தவளை வாரித்தூக்கி உச்சி முகர்ந்தாள். மறுகணமே... குகையின் வாசல் அனிச்சையாய் திறந்தது.

சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்து... படுத்த வாக்கில் பாம்பு போல் நெளிந்து ஊர்ந்து குகைக்குள் சென்று விட்டாள்.

நாகம்மாவைத் தொடர்ந்து இந்துவும் சாஷ்டாங்கமாக விழுந்தாள். விழுந்து பணிந்தவள்... ஒரு கணம் இவர்களை நோக்கிப் புன்னகைத்தாள்.

மறுகணமே படுத்த வாக்கில் நெளிந்து ஊர்ந்து குகைக்குள் நுழைய... குகையின் வாசல் இறுகச் சாத்திக் கொண்டது.

பூசாரி குகை வாசலில் மஞ்சளையும் குங்குமத்தையும் தீற்றலாய் சாற்றியபோது... 'ஓம்... ஓம்' என்று உரத்த குரலில் உச்சரித்தபடி சாதுக்களும் சாமியார்களும் குகை வாசலைத் தொட்டு வணங்கி கோவிலை வலம் வந்தனர்.

மிதிலா தேம்பியபடி எதேச்சையாகத் திரும்பியவள் அதிர்ந்தாள். கை கால் முடங்கிக் கிடந்தவர்களும் எழுந்து வலம் வந்து கொண்டிருந்த காட்சி... மேனியைப் புல்லரிக்க வைத்தது.

"புது நாகம்மா வந்ததும் விமோசனம் கிடைச்சிருச்சு போல" – சிவா



முணு முணுத்தான்.

"வா... அம்மனை வணங்கலாம்!"

சுயம்பு நாகபைரவியின் சன்னதியை நெருங்கி கண்ணீர் மல்க உற்றுப் பார்த்தாள். அம்மனுக்கு வெள்ளிக் கண்மலர்கள் சாத்தப் பட்டிருந்தன. நடுவில் மட்டும் நீல நிறக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன.

மனமுருக கண்ணீர் மல்க வேண்டியபோது... அம்மனின் முகத்தில்... ஒரு கணம் நாகம்மாவின் முகமும் மறுகணம் இந்துவின் முகமும் தோன்றி மறைந்தது.

உடல் ஜில்லென்று புல்லரிக்க... "ஓம்... ஓம்... ஓம்" என்று உச்சரித்தபடியே சாஷ்டாங்கமாக விழுந்து பணிந்தாள் மிதிலா.

சுடர் விளக்கின் ஒளியில் அம்மனின் 'நீல விழிகள்' ஜெகஜ்ஜோதியாய் ஜொலித்தன.

**முற்றும்**